நமது
# அரசியல் டுடே

www.arasiyaltoday.com வார இதழ் வீழ்வேனென்று நினைத்தாயோ

11.07.2025 மலர் : 1 இதழ் : 7 விலை ரூ.30



## NDAவில் வைகோ...
## தி.மு.க.வில் மல்லை சத்யா







## அஜித்குமார் கொலை...



## அமித்ஷா கேட்ட ரிப்போர்ட்...
## ஓரணியில் எதிர்க்கட்சிகள்!
## அப்செட் ஸ்டாலின்





# விதை போட்ட எம்.ஜி.ஆர்...
# வழிமொழிந்த எடப்பாடியார்...

**தமிழ்நாட்டின் சமூக நீதி வரலாற்றுக்கும் ஒட்டுமொத்த இந்தியாவின் சமூகநீதி வரலாற்றுக்கும் புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் அளித்த கொடை என்றே அம்பாசங்கர் கமிஷனை குறிப்பிடலாம்.**

1980 ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சி கலைக்கப்படுவதற்கு 17 தினங்கள் முன்பாக, பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டை 31 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் உயர்த்தி ஆணை பிறப்பித்தார்.

இதனுடைய பின்னணிகளை எல்லாம் விரிவாக இத்தொடரில் ஏற்கனவே பார்த்தோம்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஏற்கனவே பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீட்டு பலன்களை பெறுவதற்கான நிபந்தனைகளை வைத்து ஓர் அரசாணை வெளியிட்டார். அந்த அரசாணை ரத்து செய்யப்பட்டு பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீடு 50 சதவீதம் என உயர்த்தப்பட்டது.

இந்த இரண்டையும் எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் சிலர் வழக்கு தொடுத்தனர்.

உச்சநீதிமன்றத்தில் 50 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு எதிரான வழக்கு நிலுவையில் இருக்கும்போதே... மக்கள் மன்றத்தில் மீண்டும் தேர்தலை சந்தித்து புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் இரண்டாவது முறையாக முதலமைச்சரானார்.

அவரது இரண்டாவது ஆட்சி நடந்து கொண்டிருக்கும்போது, உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கானது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அரசால் திறம்பட நடத்தப்பட்டது.

இந்த வழக்கில் தமிழ்நாடு அரசு சார்பாக ஆர்.கே. கார்க் என்ற





# சமூக நீதியை காத்த காவலர் எடப்பாடியார்



அதிரடி அரசியல் தொடர் 7

மூத்த வழக்கறிஞரை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நியமித்தார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அளித்த பிற்படுத்தப்பட்டோருக்கான 50 சதவீத இட ஒதுக்கீடு என்பது மிகையானது என்றும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படுகிற இந்த இட ஒதுக்கீடானது அவர்களின் உண்மையான அடர்த்தியை கணக் கெடுத்து அளிக்கப்படவில்லை என்றும் அரசியல் காரணங்களுக்காக செய்யப்பட்டது என்றும் உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசுக்கு எதிராக வாதாடினார்கள்.


அதே நேரம் தமிழ்நாடு அரசு சார்பில் இவ்வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர் கார்க் இதுகுறித்து முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் உடன் நீண்ட நெடிய ஆலோசனைகளை நடத்திவந்தார்.

இந்த வழக்கில் வெற்றிபெற வேண்டும் என்பதுதான் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் முழுமையான நோக்கமாக இருந்தது.

அதன்படியே அவரது சட்ட ஆலோசனைகளும், செயல்பாடுகளும் இருந்தன.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் ஆலோசனைப் படியே உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் வாதங்கள் எடுத்து வைக்கப்பட்டன. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு அளித்தது சரியானதுதான் என்றும், தேவைப்பட்டால் இது குறித்து தமிழ்நாடு அரசு மேலும் சான்றுகளை உச்ச நீதிமன்றத்திடம் அளிக்கும் என்றும் தமிழ்நாடு அரசின் சார்பில் வாதிடப்பட்டது.

1982 அக்டோபர் 15ஆம் தேதி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் சமூக நீதிப் புரட்சிக்கு எதிராக



முன்னாள் அமைச்சர்

## கே.டி.ராஜேந்திரபாலாஜி

தொடுக்கப்பட்ட ரிட் மனுக்களை தள்ளுபடி செய்த உச்சநீதிமன்றம், அதே நேரம் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை அவர்களுடைய சமூக நிலைமை ஆகியவை பற்றி ஆராய்வதற்காக தமிழ்நாடு அரசு இரண்டு மாதங்களுக்குள் ஓர் ஆணையத்தை நியமித்து ஆராய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

ஆக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் தன்னுடைய முதலாவது ஆட்சியில் கொண்டு வந்த 50 சதவீத பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை அவருடைய இரண்டாவது ஆட்சியில் உச்சநீதிமன்றம் சட்ட ரீதியாக அங்கீகரித்தது.

அதேநேரம் உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி இரண்டு மாதங்களுக்குள் அதாவது 1982 டிசம்பர் 13 ஆம் தேதி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஓர் ஆணையத்தை அமைத்தார். அந்த ஆணையம் தான் அம்பாசங்கர் ஆணையம்.



ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரியும், முன்னாள் டி.என்.பி.எஸ்.சி மாநில தலைவருமான ஜே.ஏ. அம்பாசங்கர் அவர்களை தலைவராகக் கொண்டு ஆணையத்தை அமைத்தார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.

தமிழ்நாடு சமூக நலத்துறை அரசாணை எண் 3078 இன் படி அம்பாசங்கர் ஆணையம் அமைக்கப்பட்டது.


இந்த ஆணையத்தில் இரண்டு அரசு அதிகாரிகள் உட்பட மொத்தம் 22 பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அமைத்த இந்த அம்பாசங்கர் ஆணையத்தின் உறுப்பினர்கள் யார் யார் என்பதை இன்றைய தலைமுறையினர் அறிய வேண்டும்.

சட்ட மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். ராதா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.விஸ்வநாதன், வி.வி.சுவாமிநாதன், ஆண்டிதேவர், பழ.நெடுமாறன், அன்பில் தர்மலிங்கம், குமரி அனந்தன், ஜான் வின்சென்ட், சமரசம், ஹாஜா ஷரீஃப், மூர்த்தி, ராமசாமி மற்றும் லியாகத் அலிகான், திருமதி. சௌந்தரா கைலாசம், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி பாலசுப்பிரமணியம், கோபாலகிருஷ்ண யாதவ், குழ செல்லையா, ஜவகர் ராஜ், எஸ்.கே. பாலகிருஷ்ணன் ஆகிய பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் கிட்டத்தட்ட அனைத்து வகையினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அம்பாசங்கர் ஆணையத்தை அமைத்தார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.

இந்த ஆணையம் இப்போதும் நினைவுகூறப்படுகிறது சமூகநீதி சரித்திரத்தில்!

கடந்த ஏப்ரல் 30 ஆம் தேதி நாடு முழுவதும் சாதி வாரி கணக்கெடுப்பு மக்கள் தொகைக் கணக்கெடுப்போடு சேர்த்து நடத்தப்படும் என்று பிரதமர் மோடி தலைமையில் கூடிய மத்திய அமைச்சரவை கூட்டத்தில் முடிவெடுத்தது.



இது குறித்து அதிமுக பொதுச் செயலாளரான அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கருத்து வெளியிடுகையில்,

"தமிழ்நாடு மக்கள் பல ஆண்டுகளாக மத்திய அரசிடம் ஜாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தனர். ஏற்கனவே மாண்புமிகு அம்மாவின் அரசு இருக்கும்பொழுது, தமிழகத்தில் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த அனைத்து நடவடிக்கையும் மேற் கொள்ளப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டபிறகு வந்த திமுக அரசு அதை கைவிட்டுவிட்டது. தற்போது மத்திய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்பின்போதே ஜாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஜாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு அதிமுக சார்பில் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அண்ணன் எடப்பாடியார் கருத்து தெரிவித்திருந்தார்.

இப்போது நாடே எதிரொலித்து வரும் சாதி வாரிக் கணக்கெடுப்புக்கு அம்பாசங்கர் ஆணையம் மூலம் அன்றே விதை போட்டவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்... அதை வழிமொழிந்தவர் புரட்சித்தமிழர் எடப்பாடியார்...

**வரும் வாரம் சந்திப்போம்!**


நமது அரசியல் டுடே

வாரஇதழ்

வீழ்வேனென்று நினைத்தாயோ

குழுமத் தலைவர்/ பதிப்பாளர் மற்றும் தலைமை செய்தி ஆசிரியர்

**தா.பாக்கியராஜ்**

பொறுப்பாசிரியர்

**ராகவேந்திரா**

இணை ஆசிரியர்கள் :

**விசா, பா.முருகேஸ்வரி**

உதவி ஆசிரியர்: **ச.முத்துராணி**

தலைமை நிருபர்கள்

**த.இக்னேஷியஸ், நா.நெப்போலியன்**

**விஜிஜோசப், ஜெ.துரை, வி.காளமேகம்**

நிருபர் : **செ.அருண்,**

**த.ராதாகிருஷ்ணன்**

சட்ட ஆலோசகர்கள்

**சே.பசும்பொன் பாண்டியன்** MA.,BL.,

**கோ.ரவி** BBA., BL.,

**மா.ஜெகதீசன்** MA.,BL.,

ஆலோசகர் : **மு.முகமது காசிம்**

வடிவமைப்பாளர்: **ச.சத்தியன்**

தலைமை தொழில் நுட்ப வல்லுநர்:

**மகாதேவன்**

அலுவலக மேலாளர்:

**மா.திருமூர்த்தி**

சர்குலேஷன் மேலாளர்:

**செ.மாரியப்பன்**

**அலுவலக முகவரி:**

தாழை நியூஸ்&மீடியா குழுமம்

99, வசந்த புரி, பேஸ் 2,

பூந்தமல்லி, சென்னை 600056

அலைபேசி எண்: +91-9629628880

இமெயில்:arasiyaltodayeditor@gmail.com



கதைகள் மட்டும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் அனைத்தும் கட்டுரையாளர்களின் சொந்த கருத்துக்களே, விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பேற்காது.

த.ராதாகிருஷ்ணன்

# தீபாவளி பண்டிகை நெருங்க,நெருங்க விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு வெடி விபத்துகள் தொடர் கதையாகின்றன. இதில் கொத்துக் கொத்தாக மனித உயிர்கள் பலியாகும் அவலம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.



இந்த அவலத்துக்கு இடையே ஆத்திரமூட்டும் வகையில் செயல்பட்டிருக்கிறார் விருதுநகர் மாவட்ட எஸ்.பி. கண்ணன்.


விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே சின்னகாமன் பட்டியில் ஜூலை 1 ஆ,ம் தேதி நடைபெற்ற பட்டாசு ஆலை வெடி விபத்தில் பெண் உட்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

உயிரிழந்த குடும்பத்தினர் நிவாரணம் கேட்டு போராடிய போது வேற மாதிரி ஆயிரும் என போராட்டக்காரர்களை மிரட்டியிருக்கிறார் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கண்ணன்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே சின்னகாமன்பட்டியில் பட்டாசு ஆலையில் பணிகளின்போது காலையிலேயே விபத்தில் 9 பேர் பலியானார்கள். பட்டாசு ஆலையில் வெடி விபத்தில் உயிரிழந்த ஒன்பது பேரின் குடும்பத்தினர் மற்றும் பொதுமக்கள் விருதுநகர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பு 10 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என பட்டாசு ஆலைக்கு கோரிக்கை வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சில மாதங்களுக்கு முன்பு காரியாபட்டி அருகே பட்டாசு ஆலையில் வெடி விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு 10 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது அதேபோல சின்னகாமன் பட்டி வெடி விபத்தில் உயிரிழந்த நபர்களுக்கும் 10 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கையை முன்வைத்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வந்த விருதுநகர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்







➲போராட்டக்காரர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட எஸ்.பி. கண்ணன்





வேற மாதிரி ஆயிடும்

# பட்டாசு விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினரை மிரட்டிய எஸ்.பி.

கண்ணன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

அப்போது தங்கள் குடும்பத்தில் இருந்து உயிர்களை பறிகொடுத்தவர்கள் கண்ணீரோடு எஸ்.பி.யிடம் கோரிக்கை வைத்தனர்.

அப்போது எஸ்.பி.கண்ணன், “ஒழுங்கா போறீங்களா... இல்ல வேற மாதிரி ஆயிரம்” என்று ஒபன் மைக்கில் மிரட்ட அவருக்கும் ஆர்பாட்டக்காரர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

“எங்களை அடிப்பீங்களா? எங்களை சுடுவீங்களா? அடிச்சுக்கங்க... சுட்டுக்கங்க” என்று எஸ்.பி.கண்ணனிடம் அவர்கள் கோபமாக கேட்க, அதற்கு அவரிடம் பதில் இல்லை.

காவல்துறை தரப்பில் இது பற்றி கேட்டபோது, "விருதுநகர் மாவட்ட அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் மாவட்ட எஸ்.பி. கண்ணனை அழைத்து இந்த கூட்டத்தை கூட உங்களால சமாளிக்க முடியாதா? என கடுமையாகவே கேட்டிருக்கிறார். அந்த நிலையில் தான் டென்ஷன் ஆகி இவ்வாறு மக்களிடம் பேசிவிட்டார். எஸ் பி." என்கிறார்கள்.

விரைவில் விருதுநகர் மாவட்ட எஸ்பி மாற்றப்பட்டாலும் ஆச்சரியம் இல்லை!

நா.நெப்போலியன்



பட்டங்கள் ஆள்வதும் "சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்... என்கிற பாரதியாரின் கூற்றை மெய்ப்பித்து காட்டி இருக்கிறார் நம் தமிழகத்தை சேர்ந்த மலை ஏற்ற வீராங்கனை முத்தமிழ் செல்வி.

மற்ற விளையாட்டுப் போட்டிகளைப் போல அல்லாமல், மலை ஏற்றம் என்பது அசாதாரணமானது.

# சிங்க நடை போட்டு சிகரங்கள் ஏறியும் இவ்வளவு சங்கடங்கள்!



## முத்தமிழ்ச்செல்வியின் கவலையை போக்குவாரா துணை முதல்வர்?

உயிரை பணயம் வைத்து ஜீரோ டிகிரி போன்ற பல இக்கட்டான வானிலை மாற்றங்களுக்கு நடுவே இரவு பகலாக உறக்கம், உணவு போன்ற அடிப்படை தேவைகளை கூட தியாகம் செய்து மிக உறுதியான மனோதிடம் இருந்தால் மட்டுமே மலை ஏற்றத்தில் சாதிக்க முடியும்.

அந்த வகையில் விருதுநகர் மாவட்டம் ஜோகில்பட்டியை சேர்ந்த முத்தமிழ் செல்வி

தமிழகத்திலிருந்து இமய மலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியதோடு ஐரோப்பாவில் உள்ள எல்புரூஸ், தான்சான்யாவில் உள்ளல் கிளிமஞ் சாரோ போன்ற உலகில் உள்ள மிக உயரமான ஏழு மலை சிகரங்களில் ஏறி சாதனை நிகழ்த்தி உள்ளார்.

தமிழக அரசு சார்பில் 2023ல் கல்பனா சாவ்லா விருதில் இருந்து எண்ணற்ற உலக சாதனைகள் விருதை முத்தமிழ் செல்வி பெற்றுள்ளார். மேலும் நியூயார்க் தமிழ் சங்கத்தின் சார்பில் உலக சாதனையாளர் என்கிற உயரிய விருதையும் பெறுகிறார். இந்த நிலையில் நமது அரசியல் டுடே இதழுக்காக முத்தமிழ்ச்செல்வியிடம் சில கேள்விகளை முன் வைத்தோம்.



முத்தழ்ச்செல்வி

**மலை ஏற்றத்தில் உள்ள சவால்கள் தான் என்ன ?**

மலையேற்றம் என்பது மற்ற போட்டிகளைப் போல எளிதான போட்டி அல்ல என்பது நமக்கு தெரியும். ஆனால் அதில் உள்ள சவால்களை ஏதோ ஓரிரு வார்த்தைகளில் நாம் சொல்லிவிட முடியாது. முதலில் மலை ஏற்றம் செல்ல வேண்டும் என்றாலே அவர்களுக்கு மன உறுதியும் அதிகமான பொருளாதார செலவும் அடிப்படை தேவை. மிகமிக சவாலான ஒன்று, ஆனால் சாதனை செய்ய வேண்டும் என்கிற இறுமாப்பும் தன்னம்பிக்கையும் இருந்தால் கண்டிப்பாக நாம் வெற்றி பெற முடியும்

வாழ்வா சாவா என்கிற மன தைரியம் உள்ளவர்கள் மட்டும் தான் மலை ஏற்றத்தில் சாதனை படைக்க முடியும். மலை ஏற்றத்தின் போது ஒரு பைக்குள்ளே மட்டுமே நீங்கள் உறங்க முடியும்.

ஏதோ திறமை வாய்ந்தவராக பார்பதற்கு தெரிந்தால் மட்டும் Sponsoresகள் கிடைத்து விட மாட்டார்கள். கண்டிப்பாக மலை ஏற்றத்தில் எந்த அளவிற்கு தகுதி பெற்று இருக்கிறார்கள் என்பதனை தெரிந்து கொள்வதற்காக முன்கூட்டியே மலையில் ஏற சொல்லி பல்வேறு கட்ட சோதனை செய்வார்கள்.

**மலை ஏற்றத்தில் உள்ள சவால்களை தாண்டி... தமிழக அரசும் மத்திய அரசும் இதற்கு எந்த அளவிற்கு ஊக்கம் அளிக்கின்றனர்?**

ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், பளு தூக்குதல் என எத்தனையோ விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தை சேர்ந்த எண்ணற்ற வீரர்கள் வீராங்கனைகள் பதக்கங்களை வென்று வருகிறார்கள் ஆனால் மலை ஏற்ற வீரர்கள் என்று சொல்லும் போது விரல் விட்டு என்னும் அளவில் தான் உள்ளனர்.

பொதுவாக மற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பல

வகையிலும் அங்கீகாரம் வழங்கப்படுகிறது. ஆனால் மலை ஏற்றம் செய்யும் வீரர்களுக்கு அது போன்ற எந்த அங்கீகாரமும் இங்கு கிடைக்கப் பெறவில்லை.

**தமிழக அரசு மலை ஏற்றம் செய்யும் வீரர்களுக்கு உதவிகளை செய்து வருகிறது அதில் எந்த மாற்றுக் கருத்துகளும் இல்லை. ஆனால் மலையேற்றத்தில் சாதனை புரிந்தவர்களுக்கு வெற்றியைத் தவிர வேறு என்ன மிச்சம் என்பது தான் எனது கேள்வி ?**

மலை ஏற்றத்தில் ஈடுபடும் வீரர்களுக்கு பிற நாடுகளில், மாநிலங்களில் ஏராளமான வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகிறது... ஏன் நம் ஹரியானா, பஞ்சாப், அசாம், ஆந்திரா போன்ற மாநிலங்களில் கூட தற்போது அரசு வேலை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



எவரெஸ்ட் போன்ற மலைகளில் மலையேற்றத்தில் ஈடுபடும் வீரர்களுக்கு அரசு வேலை என்கிற அங்கீகாரம் தமிழ்நாட்டில் வழங்கப்பட வேண்டும் மலையேற்ற வீரர்களுக்கு பொருளாதார ரீதியாக இது மிகப் பெரிய பலமாக அமையும்.

**மலையேற்றத்துக்கான செலவுகளை எப்படி சமாளிக்கிறீர்கள்?**

இந்தியாவில் உள்ள எவரெஸ்ட் மற்றும் மற்ற நாடுகளில் உள்ள மிக உயரமான சிகரங்களை நான் ஏறி உள்ளேன். எனக்கு இதுவரை தோராயமாக 2.5 கோடி செலவாகி உள்ளது.

ஸ்பான்சர்கள் பெரிதும் உதவினாலும் அரசு தரப்பிலும் கூடுதல் உதவி மலை ஏற்றம் செய்யும் வீரர்களுக்கு தேவை என்பதே என்னுடைய கருத்து.

**உங்களுடைய அடுத்த கட்ட லட்சியம் என்ன?**

நூற்றுக்கணக்கான மலையேற்ற வீரர்களை உருவாக்குவதே எனது லட்சியம் என்னோடு நின்று விடாமல் இந்த மலை ஏற்றம் என்பது மேலும் மேலும் தொடர வேண்டும்.

செய் அல்லது செத்து மடி என்பதே மலை ஏற்ற வீரர்களின் கோட்பாடு எனவே நான் கடந்து வந்த பாதைகளை, எனது அனுபவங்களை வரும் தலை முறையினருக்கு சொல்லித் தர வேண்டும் என்பதில் நான் ஆவலாக உள்ளேன்.

ஒரு ராணுவ வீரரின் தியாகம் மனோதிடம் எந்த அளவிற்கு மகத்துவம் வாய்ந்ததோ அது போன்றே ஒரு மலையேற்றம் செய்யும் வீரரின் மனோதிடமும்... எனவே தமிழக அரசு மத்திய அரசும் சிறப்பு வாய்ந்த இந்த மலையேற்றத்திற்கு உதவிடவேண்டும். குறைந்தபட்சம் எவரஸ்ட் சிகரத்தில் ஏறுபவர்களுக்கு அரசு வேலை என்கிற அறிவிப்பு நிச்சயம் எண்ணற்ற மலையேற்ற வீரர்களை உருவாக்க வழிவகை செய்யும்" என்கிறார் முத்தமிழ்ச்செல்வி.

**சிங்கநடை போட்டு சிகரத்தில் ஏறியும், முத்தமிழ்ச்செல்வி போன்றவர்களுக்கு இத்தனை சங்கடங்களா?**

விளையாட்டுத் துறை அமைச்சரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் இதை கவனத்தில் கொள்வாரா?

# கோடிக்கணக்கான வாசகர்கள் தேடிப் படிக்கும்

# டிஜிட்டல் இதழ்...



நமது அரசியல் டுடே

www.arasiyaltoday.com வார இதழ் வீழ்வேனென்று நினைத்தாயோ

## நீங்க படிச்சிட்டீங்களா?

வி.காளமேகம்

# 150 கோடி ஊழல்... மதுரை குலுங்க... குலுங்க... சிக்கிய அதிகாரிகள், சிக்குவார்களா ஆளுங்கட்சியினர்?

**மதுரை மாநகராட்சியில் வரிவிதிப்பு முறைகேட்டில் சுமார் 150 கோடி ரூபாய்க்கு ஊழல் நடந்திருப்பதாக முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ குற்றம் சாட்டியிருக்கிறார்.**



முன்னாள் உதவி ஆணையர் உட்பட எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ள இந்த விவகாரம் மாநில அளவில் முக்கியமானதாக பேசப்பட்டு வருகிறது.

2022-2024 ஆண்டுகளில், மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலங்கள் 2, 3, 4, 5 ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான கட்டடங்களுக்கு, நீதிமன்ற தீர்ப்பு மற்றும் கவுன்சில் கூட்ட தீர்மானம் ஆகிய காரணங்களை சுட்டி காட்டி சொத்து வரி தாராளமாக குறைக்கப்பட்டது. இதனால் மாநகராட்சிக்கு சுமார் 150 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

விசாரணையில், பாஸ்வேர்டுகள் திருட்டுத்தனமாக பயன்படுத்தப் பட்டதும், கணினி ஆதாரங்கள் அழிக்கப் பட்டதும் தெரியவந்தது. மாநகராட்சி ஆணையாளராக இருந்த தினேஷ்குமார் 2024ல் இந்த முறைகேட்டை முதலில் கண்டறிந்து நடவடிக்கை எடுத்திருந்தார். எனினும், அதிகாரிகள் மற்றும் கவுன்சிலர்களின் மோசடி தொடர்ந்தது.

மேலும், மண்டலத் தலைவர் உதவியாளர் தனசேகரன், கணினி ஆபரேட்டர் சதீஷ் உள்ளிட்ட 5 ஒப்பந்த பணியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள், மண்டலத் தலைவர்களும், கவுன்சிலர்களும் வற்புறுத்தியதால் தான் முறைகேட்டில் ஈடுபட்டோம் எனக் கூறியுள்ளனர். ஆனால் இந்த விவகாரத்தில் அரசியல் வாதிகளான மண்டலத் தலைவர்கள் மறைக்கப்பட்டு அதிகாரிகள் மட்டுமே சிக்கவைக்கப்படுவதாகவும் அதிகாரிகள் வட்டாரத்தில் குமுறுகின்றனர்.

சைபர் கிரைம் மற்றும் மத்திய குற்றப்பிரிவு போலீசார் இணைந்து நடத்திய விசாரணையில், மண்டல அலுவலர்கள், ஒப்பந்த பணியாளர்கள்,

பில் கலெக்டர்கள், கவுன்சிலர்கள், வருவாய் பிரிவினர் உள்ளிட்ட பலர் இதில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மண்டலம் 3 அலுவலகத்தின் முன்னாள் உதவி ஆணையர் ஓய்வு பெற்ற ரங்கராஜன், உதவி வருவாய் அலுவலர் செந்தில்குமரன், மற்றும் புரோக்கர் முகமதுநூர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ தலைமையில் அதிமுக கவுன்சிலர்கள் மதுரை மாநகராட்சி ஆணையரிடம் ஜூலை 1 ஆம் தேதி ஒரு புகார் மனுவை அளித்தனர்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய செல்லூர் ராஜூ, "மதுரையில் நூறு மாநகராட்சி வார்டுகளில் மொத்தம் சுமார் 3 லட்சத்து 60 ஆயிரம் கட்டடங்கள் இருக்கின்றன. வணிக கட்டடங்கள் குடியிருப்பு கட்டடங்கள் தியேட்டர் மற்றும் இதர அரசு அலுவலகங்கள் உள்ளன. இதற்கு மாநகராட்சி ஏ பி சி என மூன்று கேட்டகிரியில் வரி விதிக்கிறது. ஆண்டுக்கு மாநகராட்சிக்கு அரசுத் துறை இல்லாமல் 275 கோடிக்கு மேல் வருவாய் வருகிறது.

வணிக கட்டடங்களுக்கு உண்டான வரியை விதிக்காமல் பலருக்கு குடியிருப்பு வரியை விதித்திருந்தனர். இது குறித்து அதிமுக கவுன்சிலர்கள் முறையிட்ட போது, நடவடிக்கை எடுக்கப்படும் என அன்றைய மாநகராட்சி ஆணையாளர் தினேஷ் குமார் கூறினார்.

150 கோடிக்கு மேல் முறைகேடு நடைபெற்றுள்ளதாக கண்டறியப் பட்டுள்ளது. இதில் திமுகவினரின் பங்கு அதிகம்.

உயர் அதிகாரிகளின் பாஸ்வேர்டு எப்படி திருடப்படும் என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

ஆணையாளர், உதவி ஆணையாளர், பில் கலெக்டர், வருவாய் உதவி



சித்ரா விஜயன்

ஆணையாளர் அவர்களின் பாஸ்வேர்ட் திருடப்பட்டு இருக்கிறது. மதுரை மாநகராட்சியில் உள்ள ஐந்து மண்டலங்களில் மாநகராட்சி மண்டல தலைவர்கள் பெண்களாக இருப்பதால் அவரது கணவர்கள் அதிகாரிகளை மிரட்டுகிறார்கள்.

வரிவிதிப்பு முறைகேட்டில் கைது செய்யப்பட்ட அதிகாரிகளை காப்பாற்று வதற்கு ஆளுங்கட்சி நிர்வாகிகள் உதவி செய்கிறார்கள். ஏனெனில் ஒழுங்காக விசாரணை நடந்தால் அதிகாரிகளை இயக்கிய ஆளுங்கட்சிப் புள்ளிகளும் சிக்குவார்கள்" என்றார் செல்லூர் ராஜூ.

இந்த விவகாரம் தொடர்பாக மதுரை மாநகாராட்சி கமிஷனர் சித்ரா விஜயனிடம் நமது அரசியல் டுடே சார்பாக பேசினோம்.

"இந்த விவகாரத்தில் நிர்வாக ரீதியான நடவடிக்கை ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டது. போலீஸ்தான் இப்போது விசாரித்து வருகிறார்கள். அதிகாரிகளுக்குப் பின்னால் மண்டல தலைவர்களாகிய அரசியல் வாதிகள் தொடர்பு உள்ளதா என்பதை போலீஸ்தான் கண்டுபிடிக்க வேண்டும்" என்றார்.

இந்த விவகாரத்தை விடாமல் தீவிரம் காட்டுமாறு எடப்பாடியிடம் இருந்து அறிவுறுத்தல் வந்தபிறகுதான் செல்லூர் ராஜூ, இதுபற்றி புகார் கொடுத்திருக்கிறார்.

# கழுத்தை அழகாக்க
# சில கருத்து...

**கழுத்து இல்ல... கழுத்து இல்ல... கண்ணதாசன் எழுத்து என்று அழகான பாடல் வரிகள் உண்டு.**

கண்ணதாசன் எழுத்து என்பதைத் தாண்டி பிரம்மனின்அழகிய எழுத்துதான் கழுத்து.

நமது உடலையும் தலையையும் இணைக்கும் அழகிய பிரதேசம்தான் கழுத்து. அந்த அழகை அழகாக்க இதோ சில கருத்து...

ஒரு பெண்ணுக்கு முகம் மட்டுமல்ல, கை, கால்களுடன், அழகான உடலும் சங்கு போன்ற கழுத்தும்தான் அழகு.

கழுத்து பகுதியில் இருக்கும் கருமையையும், சுருக்கங்களையும் எப்படி சரி செய்வது?

முகம் எவ்வளவு முக்கியமோ அதேபோன்று நம் கழுத்து பகுதியும் மிகவும் முக்கியமான ஒன்று. முகத்தின் அழகை பெருக்கிக் காட்டுவதில் கழுத்துக்கு முக்கியமான பங்கு உண்டு.

போலியான நகைகளை அணிவதாலும், சிலருக்கு தங்கங்களை அணிவதாலும் கூட அவற்றின் பாதரசம் கழுத்தில் படுவதனால் கருமை உண்டாகும்.

கற்றாழை ஜெல்லியை எடுத்து தூங்குவதற்கு முன்பு, கழுத்தின் பகுதிகளில் தடவி சிறிது மசாஜ் செய்து அப்படியே விட்டுவிட்டு மறுநாள் அதனை கழுவி வர கருமை நீங்கும்.

எலுமிச்சை பழச்சாறுடன் சர்க்கரை சேர்த்து கழுத்து பகுதியில் சிறிது நேரம் மெதுவாக மசாஜ் செய்து அவற்றை குளிர்ந்த நீரினால் கழுவி வர கருமை நீங்கும்.

புளித்த இட்லி மாவுடன் சிறிது லெமன், சிறிது தேன் கலந்து கலக்கி கழுத்தில் உள்ள கருமையின் மீது தடவி காய்ந்த பின் அதனை வெதுவெதுப்பான நீரில் கழுவி வர கருமை நீங்கும்.

உருளைக் கிழங்கு சாற்றுடன், புதினா சாற்றையும் சேர்த்து, அவற்றுடன் சிறிது சர்க்கரை கலந்து ஸ்கிரப்பு கொண்டு நம் கழுத்தில் தடவி சிறிது நேரம் காய்ந்த பின் அதனை கழுவி வந்தால் கருமை நிறம் மாறும்.

ஜாதிக்காயை உரசி நம் கழுத்தில் உள்ள கருமை நிறத்தின் மேல் பூசி அதனை காய்ந்ததும் குளிர்ந்த நீரினால் நாம் கழுவி வாரம் ஒரு முறை இதை செய்தால் கழுத்தில் உள்ள கருமை நீங்கும்.

ஐஸ் கட்டியை எடுத்து தினமும் கழுத்தில் மேல் வைத்து தடவி வர சுருக்கங்கள் போக்கி கருமை நீங்கும்.

பயர்லீனா பவுடரில் விட்டமின் ஈ ஆயில் கலந்து நன்கு கலக்கி அதனை கழுத்தில் உள்ள கருமையான இடத்தில் தடவி வர அவற்றின் நிறம் போக்கி அழகான தோற்றத்தைக் கொடுக்கும்.

பாசிப்பயிரை நன்கு ஊற வைத்து அதனை அரைத்து கழுத்தில் உள்ள கருமையான பகுதியில் தடவலாம். பிறகு உளுந்தையும் நாம் அரைத்து அதனுடன் சிறிது தேன் கலந்து கழுத்தில் தடவி வர கருமை நீங்கும்

தயிரில் சிறிதளவு மஞ்சள் தேன் இவற்றை கலந்து கழுத்தின் மேல் அப்ளை

# அழகின் அழகே...



அழகுகலை நிபுணர்
மாலதி குமணன்

7



செய்து அவற்றை தினமும் கழுவி வர கழுத்து பகுதி பாதுகாப்பாக இருக்கும்.

கோதுமை மாவு அவற்றுடன் சிறிது தயிர், லெமன் சாறு, விட்டமின் இ ஆயில் ஆகியவற்றைக் கலக்கி கழுத்தில் அப்ளை செய்த பின் சிறிது உப்பு மற்றும் சர்க்கரை இவற்றை தொட்டு மெதுவாக கழுத்தில் தடவி சிறிது நேரம் சென்று வெந்நீரில் கழுவி வர கருமை நீங்கும்.

தக்காளியுடன் சிறிது உப்பை தடவி நம் கழுத்து மேல் தடவி வர கழுத்துப் பகுதி பளபளப்பாகும்.

இவ்வாறு நாம் முகத்தின் மேல் இருக்கும் அக்கறையை கழுத்து பகுதியில் சிறிது நாம் காண்பித்தால் நம் கழுத்து அழகாகவும் மிருது வாகவும் மாறும்.

# நாய்களை போற்றும் முத்தப்பன் ஆலயம்!

## ஆச்சரியங்களின் அணி வகுப்பு!

**குழந்தைகள் பிறந்ததும் அந்த குழந்தைகளுக்கு உறவுகளை அழைத்து, அழகிய பெயரிட்டு காதில் மூன்று முறை ஓதுவது நம் பாரம்பரியம்.**



குழந்தைகளுக்கு எந்த நோயும் பாதிப்பும் வந்துவிடக்கூடாது என்பதற்காக தெய்வத்தை வேண்டி சிறப்பு பிராத்தனைகள் செய்யும் வழக்கமும் நடைமுறையில் இருந்து வருகிறது.

ஆனால் ஒரு நாய்க்கு சடங்குகள் நடந்து பார்த்திருக்கிறீர்களா?

ஆம். இந்தியாவில் கேரளா மாநிலத்தில் உள்ள ஒரு கோவிலுக்கு இந்திய நாட்டு நாய் முதல் வெளிநாட்டு நாய்கள் வரை அனைத்தையும் ஆண்டு முழுவதும் கொண்டு வந்து சிறப்பு பூஜை மற்றும் பெயர் சூட்டும் விழா நடக்கிறது.



கேரளாவின் கண்ணூர் நகரத்திலிருந்து சுமார் 10 கிமீ தொலைவில் வளப்பட்டணம் ஆற்றங் கரையில் உள்ளது ஸ்ரீ முத்தப்பன் கோயில்.

புதிதாக இந்தக் கோயிலுக்குச் செல்பவர்களுக்கு, கோயில் வளாகத்தில் நாய்கள் பக்தர்களுடன் சகஜமாக நடமாடுவது, சுதந்திரமாக பூஜைகளில் கலந்துகொள்வது ஆச்சரியமாக இருக்கலாம்.

பூசாரி பூஜை செய்தபோதும் சில



நாய்கள் கருவறை அல்லது மடப்புரா என்று அழைக்கப்படும் இடத்திற்குள் சாதாரணமாக உள்ளேயும் வெளியேயும் நடப்பதைக் காணும்போது இன்னும் ஆச்சர்யமாக இருக்கும். ஆனால் அங்குள்ளவர்களுக்கு இது சாதாரண விஷயம். சொல்லப்போனால் அங்குள்ள நாய்கள் இறைவனுக்கும் மக்களுக்கும் நண்பர்களாக இருக்கின்றன.

இந்த கோவிலில் நடக்கும் திருவப்பன வெள்ளாட்டத்தின் போது நாய்களுக்கு பெயர் சூட்டுவது அடிக்கடி நடக்கும்.

பெயர் சூட்டும் விழாவிற்கு பல்வேறு மாநிலங்களில் இருந்து பலர் தங்கள் நாய்க் குட்டிகளை அழைத்து வருகின்றனர். கேரளா, கர்நாடகா பகுதிகளில் அதிகம் காணப்படும் தெய்யம் என்ற தெய்விக நடனமாடும் கலைஞர்களால் இந்த சிறப்பு செயல்பாடு செய்யப்படுகிறது.

பக்தர்கள் அழைத்து வரும் நாய்களை தெய்யம் நடனம் ஆடும் மக்களிடம் கொடுக்கின்றனர். அவர்கள் இறைவனிடம் எடுத்து சென்று சில மந்திரங்கள் ஓதி பின்னர் நாய்களின் காதுகளில் அதற்கு பெயர் சூட்டுகின்றனர்.

அதன் பின்னர் அதற்கு பிரசாதங்கள் வழங்கி அதன் உரிமையாளரிடமே ஒப்படைக்கின்றனர்.

இங்கு நாய்களுக்கு பெயர் சூட்டும் விழா நடத்துவதற்கு எந்த ரசீதும் இல்லை, கட்டணமும் இல்லை. திருவப்பன வெள்ளாட்டத்தின் போது யார் வேண்டுமானாலும் தங்கள் செல்லப்பிராணிகளை அழைத்து வந்து ஸ்ரீ முத்தப்பனின் ஆசிர்வாதத்தைப் பெறலாம்.

முத்தப்பன் பற்றியும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்!

முத்தப்பன் ஏழைகள் மற்றும் உழைக்கும் மக்களின் கடவுள், பனைமரத்து கள் மற்றும் வறுத்த மீனை ஏற்கும் தெய்வமாக பார்க்கப்படுகிறார். மேலும் முத்தப்பன் ஒரு வேட்டைக்காரனின் உடையில், வில் மற்றும் அம்புகளை ஏந்தியவாறு சித்தரிக்கப்படுகிறார். முத்தப்பன் என்பது மகா விஷ்ணு மற்றும் பரம சிவன் ஆகிய இரு கடவுள்களின் ஒருங்கிணைந்த வடிவம்




என்றும் சொல்லப்படுகிறது.

கருவறையை அடையும் பக்தர்களை இரண்டு பெரிய நாய்களின் வெண்கலச் சிற்பங்கள் வரவேற்கின்றன. இது நாய்களை தெய்வங்களுக்கு சமமாக நடத்தும் புனிதமான இடம். பிரசாதம், பூஜைக்குப் பிறகு, மடப்புராவுக்குள் காத்திருக்கும் நாய்களுக்கு முதலில் பரிமாறப்படுகிறது, அதன் பின்னர் தான் பக்தர்களுக்கு வழங்குவர்

புராணங்களின் படி, அய்யங்கரா நடுவழி என்ற நிலப்பிரபு மற்றும் அவரது மனைவி பாடிக்குட்டி ஆகியோர் குழந்தை இல்லாததால், குழந்தைக்காக சிவபெருமானிடம் பிரார்த்தனை செய்தனர்.

அவர்களின் தொடர்ச்சியான பிரார்த்தனைக்குப் பிறகு, ஆற்றங்கரையில் ஒரு குழந்தை அழுவதைக் கண்டு, ஆண் குழந்தையை தத்தெடுத்தனர். அப்போது சமூகத்தில் தீண்டாமை அதிகமாக இருந்தது

வேட்டையாடுவதில் விருப்பமுள்ள முத்தப்பன், ஒருமுறை தாழ்த்தப்பட்ட சமூகப் பிரிவைச் சேர்ந்த மக்கள் வசிக்கும் உள்ளூர் சமூகத்தை அடைந்தார். பசியும் தாகமுமாக இருந்த அவர் குடிக்க தண்ணீர் கேட்டார். உயர்சாதிக் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவனுக்கு உணவு, தண்ணீர் வழங்கினால் தண்டனை கிடைக்கும் என்று அஞ்சி, மக்கள் தங்கள் குடிசைகளை விட்டு வெளியே வரவில்லை. அப்போதுதான் அந்த கிராமத்து நாய்கள் வாலை ஆட்டியபடி சிறுவனிடம் சென்றன.

மெதுவாக, மக்களும் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வரத் தொடங்கினர், அவருக்கு மூங்கில் பாத்திரங்களில் தண்ணீர் வழங்கினர். முத்தப்பனுக்கும் நாய்களுக்கும் உள்ள பந்தம் அப்போது தொடங்கியதாம்.. முத்தப்பன் வேட்டையாடச் செல்லும் போதெல்லாம் காட்டுக்கு நாய்கள் அவரைப் பின்தொடர ஆரம்பித்தன. முத்தப்பன் ஏழைகள் மற்றும் பிற்படுத்தப் பட்ட சமூகத்தினருக்கு உதவத் தொடங்கினார்

பின்னர் அவரது இறை ரூபத்தை காட்டிவிட்டு முத்தப்பன் மறைந்ததாக சொல்லப்படுகிறது. அவரது நினைவாக எடுத்த கோவிலில் இன்றும் நாய்கள் அவருடன் தோழமை காட்டுவதாக நம்புகின்றனர். இந்த கோவிலில் உலா வரும் நாய்களின் எண்ணிக்கையை குறைக்க ஒரு முயற்சி நடந்துள்ளது. சில நாய்களை வெளியேற்றி உள்ளனர்.

அந்த சமயத்தில் தெய்யம் கலைஞர்களால் அருள் வந்து ஆட முடிய வில்லை. நாய்களை வெளியேற்றுவது முத்தப்பனை அவமானம் செய்வது போல என்று உணர்ந்த மக்கள் அந்த முயற்சியைக் கைவிட்டுள்ளனர். இந்த கோவில் மட்டும் இல்லாது சுற்றி உள்ள இடங்களில் உள்ள நாய்களும் சிறந்த முறையில் கவனித்துக் கொள்ளப் படுகிறது.


நாய்கள் நமது பாரம்பரியத்தில் பைரவர் வாகனமாக கௌரவமாக அழைக்கப்படுகிறார்கள். இறைவனின் ஒவ்வொரு படைப்பும் அர்த்தம் மிகுந்ததே..

அந்த வகையில் பைரவரின் வாகனங்களைப் போற்றுவது பைரவரை போற்றுவதே.... முத்தப்பன் கோயிலுக்கு ஒரு முறை போய் வாருங்கள்!

த.இக்னேஷியஸ்

# தளவாய்க்கு போட்டி யார்?

**குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதியை தொடர்ந்து தக்க வைப்பதற்கான வேலைகளில் இறங்கிவிட்டார் முன்னாள் அமைச்சரும் அதிமுக அமைப்புச் செயலாளருமான தளவாய் சுந்தரம்.**



இப்போதே கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி எங்கும் சுவர் விளம்பரத்தில் ராக்கெட் வேகம் காட்டத்தொடங்கி விட்டார்.

இதனால் கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதியில் மீண்டும் தளவாய் போட்டி என்பது உறுதியாகிவிட்டது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் அகஸ்தீசுவரம் தாலுகா பகுதியில் காலம் காலமாக திமுகவை சேர்ந்தவர்களே பொதுவெளியில் இரட்டை இலைக்கு ஆதரவாக இருந்தனர்.

இந்த நிலையில் நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் கன்னியாகுமரி சட்ட மன்றத் தொகுதி திமுக வேட்பாளர் யார் என்ற கேள்வி இப்போதே எழ ஆரம்பித்துவிட்டது.

அகஸ்தீசுவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் பாபு, குமரி மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் பிரபா ராமகிருஷ்ணன், திமுகவின் தலைமை செயற்குழு உறுப்பினரும், வர்த்தக அணி மாநில இணைச்செயலாளர் தாமரை பாரதிக்கு ஆகியோர் கன்னியாகுமரிக்காக களத்தில் இருக்கும் நிலையில்... தளவாய் சுந்தரம் பிரச்சார வேகத்தை பார்த்தபின் பணப் பாய்ச்சலில் ஈடுகொடுக்கப் போவது என்ற சிந்தனை திமுக கட்சி தலைமைக்கு ஏற்பட்டு விட்டதாம்.

அதனால், நெல்லையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஞான திரவியத்தின் பார்வையை கன்னியாகுமரி மீது திரும்பியுள்ளது.

கன்னியாகுமரியில் இவருக்கு பல நட்சத்திர விடுதிகள் உள்ளது. எந்தக் கட்சி விவிஐபிகள் குமரி வந்தாலும் ஞானதிரவியத்தின் நட்சத்திர விடுதிகள் ஒன்றில்தான் தங்கவேண்டும்.

தளவாய் சுந்தரத்திற்கு எதிராக திமுகவின் சார்பில் போட்டியிட ஞானதிரவியம் கடும் முயற்சியில் இருக்கிறார்.

பென் டீம் ரிப்போர்ட், உளவுத் துறை ரிப்போர்ட் எல்லாம் இருக்கிறது. அதனால் வெறும் பணம் மட்டும் வேட்பாளரை தேர்வு செய்ய முடியாது என்கிறார்கள் திமுகவில் விவரம் அறிந்தவர்கள்.

மக்களை காப்போ
தமிழகத்தை மீட்ப

புரட்சித் தமிழர்

எடப்பாடி K பழனி

கழகப் பொதுச்செயலாளர், சட்டமன்ற எதி
தமிழ்நாடு முன்னாள் முதலமை

அவர்களின் எழுச்சிப் ப
வெற்றிபெற வாழ்த்



ஜூலை 7 முதல்

கே.டி.ராஜேந்

கழக அமைப்புச் செ
விருதுநகர் மாவட்ட கழக
முன்னாள் அமை



தலைவர்
செயலாளர்
செயலாளர்(மேற்கு)
வாக்களிப்பீர்
ADVT



# ஆன்மீகத்திற்குள் ஒளிந்திருக்கும் 'ஜாதகம்'

சுதா வீரசிகாமணி

7

# விஞ்ஞானிகளுக்கு சவால் விடும்

# போகர் மகிமைகள்...

பூமியை பற்றி நம் காலத்தில் இருக்கும் விஞ்ஞானிகள் பல்வேறு கருத்துகளை சொல்லி இருக்கிறார்கள். இறுதியில் அவர்கள் விஞ்ஞானத்தின் உதவியால் தான் இந்த பூமியில் முக்கால் பங்கு நீரும் ஒரு பங்கு நிலமும் இருப்பதாக கண்டுபிடித்தார்கள். ஆனால் போகர் இதை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தனது நூலில் தெளிவாக சொல்லி இருக்கிறார்.

"கொள்ளவே பிரிவீதி என்ற பூமிதானும்

குவயத்தில் நான்கில் ஒரு பங்குமாகும்

வெல்லவே சத்த சாகரமுமப்பா"

3 பங்கு என்னவாகும்"

இந்தப் பாடல் வழியாக இந்த உலகம் மூன்று பங்கு நீராலும் ஒரு பங்கு நிலமாகவும் என்று அவர் தெளிவாக சொல்லியிருக்கிறார். இவரை போல இந்த உலகத்தில் பலமுறை சுற்றி வந்த சித்தர்கள் யாருமில்லை என்று சொல்லலாம்.

இது மட்டுமில்லாமல் சித்த மருத்துவத்தில் மிகப்பெரும் பங்கு போகருக்கு இருக்கிறது. இவர் எழுதிய "போகர் 7000" என்ற நூலில் அவர் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களை எழுதியிருக்கிறார்.

மேலும் இவர் இயற்றிய "போகர் நிகண்டு "போகர் கற்பகம் 300" ஆகிய நூல்களை ஒவ்வொரு மூலிகை உடைய ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியாக ஆய்வு செய்து அந்த மூலிகையுடைய வேர், தண்டு, இலை, பூ, காய், கொட்டைகளுடைய பண்புகளை, தெளிவாக ஆராய்ந்து எழுதி இருக்கிறார்.

அந்த காலகட்டத்தில் அகத்தியர் மட்டுமல்ல, மற்ற எந்த சித்தர்களாலும் எழுதப்படாத பல உண்மைகளை அவர் எழுதியிருக்கிறார். 45 கர்ப்ப மூலிகை பற்றி அவர் சொல்லியிருக்கிறார். அந்த மூலிகைகள் முறையாக சாப்பிட்டால் "மனிதனுடைய வயது ஏறினாலும் இளமை குன்றாமலும் இருக்கும்படியும் முடி நரைக்காமல் இருக்கும் தோல் சுருங்காமல் இருக்கும் உடல் மூப்பு அடையாமல் இருக்கும் உழைக்கும் போது மூச்சு வாங்காமல் இருக்கும் மலைகளில் ஏறலாம் வான் வழியில் பறந்து போகலாம் வான் அடுக்குகளில் உள்ள மண்டலத்தை வெறும் கண்ணால் பார்க்கலாம் என்று இந்த 45 கற்பக மூலிகைகளை பற்றி சொல்லி இருக்கிறார். பல மருத்துவ விஞ்ஞானிகள் இன்று வரை அதைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதை புரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் ஏனென்றால் இந்த மூலிகை பயன்படுத்தி தான் போகர் பல வருடமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

பல இடங்களில் சென்று இருக்கிறார். மேலும் மனித உடலில் உள்ள ரத்த அணுக்கள், தசை அணுக்கள், எலும்பு அணுக்கள், நரம்பு அணுக்கள், எல்லாமே முதிர்ச்சி அடையாமல் இருக்க எப்போதுமே இளமையாக இருப்பதற்கான ஆராய்ச்சியையும் அவர் மேற்கொண்டு இருந்தார்.

மேலும் இரும்பை தங்கமாக்கும் அந்த ரகசியத்தை அவர் தெரிந்து வைத்திருந்தார். அவ்வளவு ஏன் பசலை, பொன்முசுட்டை, பொன் ஊமத்தை, கருப்பு கையாந்தகரை, சிறியாநங்கை, பெரியா நங்கை போன்ற செடிகளை வைத்து ஒரு மட்டமான உலோகத்தை கூட வைத்து தங்கமாக மாற்றும் வித்தையை போகர் அவரது பாடலில் சொல்லி இருந்தார்.

மேலும் "நாகத்தை ஈயமாக்க அந்த ஈயத்தை வெள்ளியாக்க, அந்த வெள்ளியை செம்பாக்க, அந்த செம்பை தங்கமாக்க, செடி கொடிகளால் உள்ள சத்துக்களால் முடியும் என்பதை போகர் பல பாடல்களிலும் அதை அவர் தெளிவாக சொல்லியிருக்கிறார். அவ்வளவு விஷயத்தை அவர் வெளிப்படையாக சொன்னாலும் பல ஆண்டுகளாக பல பேரும் முயற்சி செய்தும் அவர்களால் அதை தங்கமாக மாற்ற முடியவில்லை. ஏனென்றால் போகரைப் போலவே தவ வலிமை உடைய சித்தர்களால் மட்டுமே அதை ஆராய்ச்சி செய்ய முடியும்.

தாவரங்கள் மட்டுமல்ல கல், மண், பாறை, உப்பு கலந்த காற்று பிராணிகள் உடைய உடம்பில் உள்ள நகம், பல், எலும்பு தோல், முட்டை, ஒரு சிப்பி ஓடு, என்று இப்படி ஒன்றும் விடாமல் எல்லா பொருள்களையும் அதனுடைய வேதியல் பண்பு மாறாமல் அதையும் போகர் ஆய்வு செய்திருக்கிறார்.

போகருடைய நூல்களில் எண்ணற்ற நூல்களைப் பற்றி அவர் தெளிவாக கூறியிருக்கிறார். அவரது சீடரான கொங்கண முனிவரும் சட்டை முனியும் அவரவர் எழுதிய வாத காவியங்களில் அவற்றை விரிவாக எழுதியிருக்கிறார்கள்.

போகர் எழுதிய பல வேதியியல் முறைகளை இன்று சரியாக புரிந்து கொண்டு சோதனைக்கூடங்களில் அதை முறையாக ஆராய்ச்சி செய்தால் போகருடைய பெருமையும், இவரால் தமிழ் இனத்தின் பெருமையும் உலகமெங்கும் பரவும்.

மேலும் போகர் காந்தத்தையும் இரும்பையும் பயன்படுத்தி ஒரு சித்திர ரதத்தை செய்து இருக்கிறார். அதாவது நாம் இன்று பயன்படுத்தும் விமானத்தைப் போல அவர் அந்த காலகட்டத்தில் உருவாக்கி இருக்கிறார்.

போகர் 7000 என்ற நூலில் அறிவியலைப் பற்றி மட்டும் ஆயிரக்கணக்கான பாடல்கள் இருக்கின்றன. ஆச்சரியப்படக்கூடிய விஷயம் என்னவென்றால் ஒரு சில அரிதான இயற்கை பொருட்கள் சில நேரங்களில் மட்டுமே கிடைக்கும், ஒருவேளை இயற்கையாகவே கிடைக்கும். அந்த பொருள்கள் கிடைக்காமல் போனால் அதே குணமுடைய 95 விழுக்காடு உடைய ஒரு பொருளை செயற்கையான முறையில் உருவாக்குவது தான் சித்த வைத்தியத்தில் வைப்பு சரக்கு என்று சொல்வார்கள்.

செயற்கை ஆனாலும் அது இயற்கையான பொருள் போல ஒரே குணத்தில் இருக்கும். போகர் இவ்வாறு பல வைப்பு சரக்குகள் உருவாக்கி வைத்திருந்தார். பெரிய பெரிய எந்திரங்கள் தொழிற்சாலைகள் எதுவுமே இல்லாமல் சாதாரண முறையிலேயே மாற்றுப் பொருட்களை பயன்படுத்தி அதை அவர் உருவாக்கி வைத்திருந்தார்.

மேலும் போகர் வர்ம சூத்திரத்தை பற்றியும் சொல்லியிருக்கிறார்.

வேந்தன்

# அனைத்து சீசனிலும் குற்றால அருவி கொட்டிட அற்புதமான திட்டம்!

## – அமைச்சர்களை சந்தித்து அழுத்தம் கொடுக்கும் பொ. சிவபத்மநாதன் பேட்டி!

**குற்றாலம் அருவி சீசன் இப்போது சக்கை போடு போடுகிறது. அதேநேரம் கடந்த சில ஆண்டுகளில் பொய்த்துப் போய் சீசன் மோசம் செய்தது.**

இந்த நிலையில் குற்றாலத்தில் வருடம் முழுவதும் அருவிகள் நிரம்பி வழியும்படி செய்ய முடியும் என்ற திட்டத்தோடு வனத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பனை சந்தித்து கோரிக்கை வைத்திருக்கிறார் தென்காசி தெற்கு மாவட்ட திமுகவின் முன்னாள் மாவட்டச் செயலாளர் பொ. சிவபத்மநாதன். இதே கோரிக்கைகளுடன் நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்களிடம் இந்த திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

என்ன திட்டம் அது? சிவ பத்மநாதனிடமே பேசினோம்.

“ஊட்டி, கொடைக்கானல் போன்ற சுகவாசதலங்கள் பணக்காரர்களுக்கு என ஆகிவிட்டன. ஏழை எளியவர்களும் நடுத்தர மக்களும் பெரும்பாலும் வந்து மகிழ்ந்து செல்லும் குற்றாலத்தில் தண்ணீர் நிரந்தரமாக விழும்படி செய்ய ஒரே வழி





ஒரே சிறிய அணைக்கட்டை கட்டுவதுதான்.

பேரருவிக்கு மூன்று கிலோமீட்டர் தொலைவில் இயற்கையாகவே மூன்று புறமும் அரண்களாக மலைமுகடுகள் சூழ்ந்துள்ள தனியாருக்கு பாத்தியப்பட்ட தெற்குமலை எஸ்டேட் அருகில் டிக்கெட் பாறை எனும் இடத்தை ஒட்டி 600 மீட்டர் நீளத்துக்கு மலைகளுக்கு இடையே பெரிய இடம் உள்ளது.

கேரள மாநிலம் இடுக்கியில் பெரியார் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ARCH TYPE அணை போல பேரருவி மேல்புறம் வரை சிறிய சிறிய சில் தடுப்பு அணைகள், தேக்கங்களை அமைக்கலாம். இயற்கையாக 3 புறங்களிலும் அரண்கள் போல மலைகள் சூழ்ந்து இந்த அணைக்கட்டு திட்ட செலவு வெகு குறைவாகத்தான் ஆகும். இந்த அணைக்கட்டு திட்டம் செயல்படுத்தினால் குற்றாலத்திற்கும் அதன் சுற்றுப்புற பகுதிகளிலும் ஏற்படும் நன்மைகள் எண்ணில் அடங்காது.

அணைகட்டி நீரைத் தேக்கி வைத்தால் வருடம் முழுவதும் நான்கு பருவ காலமும் நிரந்தரமாக குறிப்பிட்ட அளவு தண்ணீர் அருவிகளில் விழும். வருடம் முழுவதும் சுற்றுலா பயணிகள் மகிழலாம். மக்கள் வெள்ளம் வந்து விடுமோ பாறைகள் கற்கள் வந்து விழுந்து விடுமோ என்ற அச்சமின்றி நிம்மதியாக குளிக்கும் படி செய்யலாம்.

அதுமட்டுமல்ல... குற்றாலம் பகுதியிலும் அதை சுற்றியுள்ள தென்காசி, செங்கோட்டை வட்டார பகுதி மக்களுக்கு நிரந்தரமாக வருடம் முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கும்படி செய்யலாம், 55 கிலோமீட்டர் தொலைவில் இருந்து தாமிரபரணி திட்டத்தின் கீழ் குடிநீரை அங்கிருந்து கொண்டு வருவதை விட ஐந்து கிலோமீட்டர் தூரத்தில் இங்கிருந்து கொடுத்து விடலாம். இதனால் நீண்ட நாள் குடிநீர் பிரச்சனைக்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்பட செய்யலாம்.

அதிகப்படி தண்ணீரை விரயம் செய்யாமல் சுற்றிலும் உள்ள பாசன குளங்களில் சேமிப்பதன் மூலம் மூன்று போகமும் விளையும். தானியக்களஞ்சியமாக தென்காசி செங்கோட்டை வட்டார பகுதிகளை ஆக்கிவிடலாம். விவசாயிகளின் வாழ்க்கை தரமும் பொருளாதார ரீதியாக உயர்வு அடைய வழிவகை செய்யலாம்.

அணை கட்டும் இடத்தின் நீர் பிடிப்பு பகுதியில் இருந்து பேரருவி வரை செங்குத்தாக தண்ணீர் ஓட்டம் இருப்பதால் அதை அணை கட்டி பல்நோக்கு திட்டமாக குறைந்த அளவில் 10 மெகாவாட் புனல் மின்சார உற்பத்தி நிலையம் சில கூட அமைக்க முடியும்.

அணைக்கட்டில் தண்ணீர் நிரந்தரமாக

தங்குவதால் குறைந்து வரும் வன வளங்களும் மரங்களும் மூலிகைகளும் செழிப்படைந்து பெரிய மூலிகை பாதுகாப்பு தோட்டத்தையே நிறுவலாம்.

கோடைகாலங்களில் வனத்தில் உள்ள வனவிலங்குகள் குடிக்க குடிநீரின்றி இறந்தும் அழிவதை தடுப்பதுடன் அவைகள் ஊருக்குள் இறங்கி வராமலும் இருக்க செய்துவிடலாம். அணை கட்டுவதன் மூலம் மீன் வளத்தையும் பெருக்க முடியும்

நிரந்தரமாக தண்ணீர் வசதி கிடைக்கும் போது தோட்டக்கலைத் துறைக்கு ஊட்டியில் உள்ளது போல் பொட்டானிக்கல் கார்டன் உள்ளிட்ட தோட்டக் கலைத் துறை பண்ணைகள் அமைக்கலாம்.எல்லா சீசனிமும் தண்ணீர் வந்தால் பெரும் தொழில் நிறுவனங்கள் குற்றாலத்தில் முதலீடு செய்வார்கள். ;பொருளாதாரமும் அதிகரிக்கும்.

இந்த திட்டம் 1962ல் பெருந்தலைவர் காமராஜர் முதல்வராக இருக்கும்போது திட்டமிடப்பட்டும் தனிப்பட்ட ஒரு சில மனிதர்களின் தலையீட்டால் தடைபட்டுப் போனது. இதே போல ஐந்தருவி, கொண்டந்தோப்பு ஓடையில் சிறிய தடுப்பணை மற்றும் ஐந்தருவி வாய்தாமலை எஸ்டேட்



பகுதியில் தடுப்பணை, பழைய குற்றாலம் அழுத கன்னி ஆற்றில் சிறிய அணைக்கட்டு என பல திட்டங்கள் முன்பே போடப்பட்டும் இன்னமும் கனவாகவே இருக்கிறது. இதுகுறித்து நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன் உள்ளிட்ட அமைச் சர்களிடம் மனு அளித்துள்ளேன்.

இத்திட்டமானது வருவாய் துறை. பொதுப்பணித் துறை. நீர் வளத்துறை, வனத்துறை, சுற்றுலா துறை, மின்சாரத்துறை என அரசின் முக்கிய துறைகள் சேர்ந்து செயல்படுத்த வேண்டிய திட்டமாகும். திமுக ஆட்சியில் இத்திட்டம் தொடங்கி நிறை வேற்றப்பட்டால் குற்றாலத்தில் மிகப்பெரிய மறுமலர்ச்சி ஏற்படும்” என்றார் பொ. சிவ பத்மநாதன்.

குற்றால சிறப்பு நிலை பேரூராட்சியின் தலைவரும் உறுப்பினர்களும் 10 வருடங் களுக்கு முன்பே தங்களது கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி மாநில அரசுக்கு அனுப்பி உள்ளனர். பல கட்சிகளும் தங்களது கட்சி கூட்டத்தில் அணைக்கட்ட தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். குற்றாலத்துக்கு அருகே உள்ள காசிமேஜர்புரம் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த சந்திரசேகர் இந்த அணைக்கட்டுத் திட்டத் துக்காக தீவிரமாக முயன்றார்

காமராஜர் காலத்தில் நிறை வேற்ற முடியாததை ஸ்டாலின் நிறைவேற்றுவாரா? வருடம் முழுவதும் குற்றாலம் கொட்டுமா?

# வாசகர் கடிதங்கள்!

@

முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திரபாலாஜி எழுதி வரும் சமூக நீதி பற்றிய தொடரை படிக்கப் படிக்க எங்களைப் போல இந்தத் தலைமுறைக்குத் தெரியாத, எங்களிடம் இருந்து மறைக்கப்பட்ட பல விஷயங்கள் தெளிவாக தெரிகின்றன.

மாணவ வாக்காளர்கள் இத்தொடரைப் படித்தால்; பெரும் புரட்சி ஏற்படும்!

**-ராஜகோபால், மன்னார்குடி**




@

வைகோவுக்கு எதிராக ஸ்டாலின் மூவ் தலைப்பிலான செய்தியை படித்தேன். வைகோவின் முழு அரசியல் வாழ்வுமே ஸ்டாலினுக்கு எதிராக மூவ் தான்.

என்றைக்குமே ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கில் மதிமுக ஆரம்பிக்கப்பட்டதில்லை... திமுக ஆட்சியைப் பிடித்துவிடக் கூடாது என்ற நோக்கிலேயே சட்டமன்றத் தேர்தல்களில் வைகோ முடிவெடுப்பார். இம்முறை என்னாகிறது என்று பார்ப்போம்.

**-வேலுகண்ணன், சிந்தாதிரிப்பேட்டை**



தமிழ் சினிமா போதையின் பிடியில் இருக்கிறது என்ற தகவல் எனக்கு பெரிய அதிர்ச்சி தரவில்லை. கொஞ்சம் நல்ல சம்பளம் வாங்குபவர்களே டாஸ்மாக் பக்கம் போகாமல் எலைட் தேடி ஓடுகிறார்கள். கோடிகளில், லட்சங்களில் புரள்பவர்கள் தங்களது அடுத்த தேடலாக போதை மருந்தை வைத்திருக்கிறார்கள். இந்த நெட்வொர்க் மிகவும் ஆபத்தானது.

வாங்கிப் பயன்படுத்திய நடிகர் ஸ்ரீகாந்துக்குகே சிறை என்றால்... அதை தமிழ்நாட்டுக்குள் கொண்டுவந்தது யார், யார்? அவர்களுக்கு என்ன தண்டனை?

**-திருவேற்காட்டான், மதுரை**

ஆர்.எஸ்.எஸ். மாவட்ட ஊர்வலத்தைத் தொடங்கி வைத்த தளவாய் சுந்தரத்துக்கு ஒரு நீதி... ஆர்.எஸ்.எஸ். நூற்றாண்டு விழாவில் அதன் தேசிய தலைவர் மோகன் பகவத்தோடு இருக்கும் வேலுமணிக்கு ஒரு நீதியா என்று மருது அழகுராஜ் கேட்கும் கேள்வி நியாயமானது.

கூட்டணிக்காக எதையும் இழக்கலாம், கட்சியையே இழந்துவிடக் கூடாது. ஜாக்கிரதை!

**-கண்ணன், சேலம்**





அரசு ஊழியர்களின் போராட்டம் குறித்த ஜெய ராஜராஜேஸ்வரனின் பேட்டி பல விஷயங்களைத் தெளிவாக்கியது. 2021 தேர்தலுக்கும் 2026 தேர்தலுக்கும் இடையே அரசு ஊழியர்கள் திமுகவால் பகடைக் காயாக பயன்படுத்தப்பட்ட நிலைமை எப்படி மாறும் என்றும் அவர் விளக்கியிருக்கிறார்.

அதேநேரம் இன்னொரு கேள்வி... பென்ஷன் கேட்கும் அரசு ஊழியர்கள், வேலைபார்க்கும்போது சம்பளம் மட்டும்தான் வாங்குறாங்களா? வாங்குற சம்பளத்துக்கு ஒழுங்கா வேலை பாக்குறாங்களா?

**-வெற்றிச்செல்வன், நாகப்பட்டினம்**


கட்டி முடிக்கப்பட்ட பஸ் நிலையத்துக்கு கண்ணகி பெயர் வைப்பதா, பென்னிகுயிக் பெயர் வைப்பதா என்று நடக்கும் பாலிடிக்ஸ் பட்டிமன்றம் சுவையாக உள்ளது. பெயர் வைக்கும் பிரச்சினையில் திறந்து வைப்பதை மறந்துவிடாதீர்கள். பஸ் ஸ்டாண்டுக்கு பெயர் இல்லையென்றாலும் பரவாயில்லை.

**-விஸ்வநாத், தேனி**

# வாசகர் கடிதங்கள்!

# நடு இரவில் பெண்ணிடம் வீடு தேடி விசாரணை! CCTV யில் சிக்கிய போலீஸ்!





**சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் லாக் அப் டெத் தொடர்பான சர்ச்சையில் போலீசார் சிக்கித் தவிக்கும் நிலையில், மதுரை போலீஸார் இன்னொரு கூடுதல் சர்ச்சையில் சிக்கியிருக்கின்றனர்.**

*சிவில் பிரச்சினையில் போலீஸார் நள்ளிரவில் வீட்டுக்குச் சென்று பெண் காவலர்கள் இல்லாமல் பெண்ணை விசாரணைக்கு அழைத்து கட்டாயப்படுத்தியுள்ளனர். இதன் சிசிடிவி கள் வெளியாகி அடுத்த அதிர்வை ஏற்படுத்தியுள்ளன.*

*மதுரை திருப்பரங்குன்றம் அருகே தனக்கன்குளம் திருவள்ளூர் காலனியை சேர்ந்தவர் சகாயராஜ் வயது 55. இவர் இப்பகுதியில் கேபிள் டிவி நிறுவனம் நடத்தி வருகிறார். இவரது உறவினர் டாக்டர் ரத்தின மாலா (வயது 70) என்பவர் லண்டனில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.*

*இவருக்கு சொந்தமான நிலம் நிலையூரில் சர்வே எண் 332/1 A, IA, 332 / 1B, IA கட்டுப்பட்ட 1 ஏக்கர் 30 முப்பது செண்ட் உள்ளது.*

*இந்த நிலத்தை அந்தப் பகுதியில் பழைய இரும்பு கடை வைத்து நடத்தி வரும் குமரேசன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அதனைத் தொடர்ந்து ரத்தினமாலா லண்டனில் இருப்பதால் நிர்வாகிக்க பொறுப்பை சகாயராஜ் இடம் ஒப்படைத்துள்ளார்.*

*பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட சகாயராஜ் மேற்படி இடத்தினை ஆக்கிரமிப்பு அகற்றம் செய்ய முயன்ற போது அந்த இடத்தில் ஆக்கிர மித்த குமரேசன் தகராறு செய்தார். இதனைத் தொடர்ந்து சகாயராஜ் மதுரை திருமங்கலம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். மதுரை வருவாய் கோட்டாட்சியர்*

விசாரணை நடந்தது. இதில் சகாயராஜுக்கு சாதகமாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதனை தொடர்ந்து மேற்படி இடத்திற்கு செல்ல கடந்த 23.05.25 அன்று திருப்பரங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளர் மதுரை வீரனிடம் மனு அளித்து



உதவி கேட்டுள்ளார் சகாயராஜ்.

இந்நிலையில் கடந்த 27ஆம் தேதி நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சகாயராஜ் தனது வழக்கறிஞர்களுடன் அந்த இடத்தில் பழைய கம்பி வேலிகள் மற்றும் புதர்களை அகற்றி வேலை செய்தனர் .

அப்போது இந்த இடத்தை ஏற்கனவே ஆக்கிரமித்திருந்ததாக கூறப்படும் குமரேசன். ‘இது என் இடம். உள்ளே நுழையக் கூடாது’ என திருப்பரங்குன்றம் காவல் ஆய்வாளர் மதுரை வீரனிடம் புகார் அளித்தார். இதன் அடிப்படையில் சகாயராஜ் மீது 27.05.25 அன்று மாலை 4 மணிக்கு



வழக்கு பதிவு செய்தனர் .

அன்று நள்ளிரவு கடந்து சுமார் 3. 40 மணியளவில் 10க்கும் மேற்பட்ட போலீசார் ஆய்வாளர் மதுரை வீரன் தலைமையில் சகாயராஜ் வீட்டுக்குச் சென்றனர். வீட்டில் சகாயராஜ் இல்லை. அவரது மனைவி மேரி வசந்தாவிடம், ‘இன்ஸ்பெக்டர் கூப்பிடறாரு. விசாரணைக்கு வாங்க’ என அழைத்துள்ளனர். பயந்துபோன மேரி வசந்தா, ‘நானும் என் மகளும்தான் வீட்ல இருக்கோம். இந்த நேரத்துல எப்படி வர்றது? காலையில வாங்க’ என்று கதறியும் சுமார் ஒரு மணி நேரமாக கதவை தட்டி போலீஸார் தொந்தரவு செய்தனர்.

இதனால் மேரி வசந்தா வீட்டில் இருந்து வெளியே வந்து ஆய்வாளர் மதுரை வீரன் மற்றும் போலீசாரிடம் சுமார் 30 நிமிடம் பதில் கூறியுள்ளார். “இது நிலப்பிரச்சினை. அதுவும் ஆக்கிரமிப்பு செய்தவருக்கு ஆதரவாக வந்த போலீஸ், வீட்டுக்குள் பெண் போலீஸார் இல்லாமல் நுழைந்து ஒரு பெண்ணை விசாரணை என்ற பேரில் டார்ச்சர் செய்திருக்காங்க. போலீஸ் திருந்த மாட்டாங்களா?’ என்று சமூக ஆர்வலர்கள் குமுறுகின்றனர்.

சாதாரண நிலப் பிரச்சினை தொடர்பாக பதியப்பட்ட எஃப் ஐ ஆர் மீது நள்ளிரவில் போலீசார் அத்துமீறி வீட்டில் இருந்த பெண்ணை வெளியே விசாரணைக்கு அழைத்த சிசிடிவி காட்சி தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

இந்த சர்ச்சை தொடர்பாக திருப்பரங்குன்றம் காவல் ஆய்வாளர் மதுரை வீரனிடம் நாம் பேசியபோது, “ஏழு லட்ச ரூபாய் ப்ராபர்ட்டியை இடித்துவிட்டார் என்ற புகாரில் சகாயராஜ் மீது எஃப்.ஐ. ஆர் போட்டிருக்கோம். அது சம்பந்தமா அவரை போலீஸ் தேடியது. டவர் லொக்கேஷன் போட்டுப் பார்த்தபோது அங்கேதான் அவர் இருந்தார் என்று அறிந்துதான் போலீஸார் அங்கே வீட்டுக்குச் சென்றனர்.

காலிங் பெல் அடிச்சு போலீஸார் கேட்டனர். அவர் இல்லை என்றதும் திரும்பிவிட்டனர். மற்றபடி எதுவும் நடக்கவில்லை. நீங்கள் சொல்லித்தான் சிசிடிவி வீடியோ பற்றி தெரிகிறது” என்று பதிலளித்தார்.

ஆனால் அந்த சிசிடிவியில் ஆண் போலீஸார் இரவு நேரத்தில், அந்த பெண்ணை வீட்டில் இருந்து வெளியே அழைத்துச் செல்லும் காட்சி தெளிவாக பதிவாகியுள்ளது.

ச.முத்துராணி

# கல்யாணத்துக்கு பின் கூடும் கிளாமர்



நடிகை கீர்த்தி சுரேஷுக்கு சில மாதங்களுக்கு முன்பு கோவாவில் திருமணம் நடந்தது. அந்த திருமணத்துக்கு விஜய் திரிஷா ஆகியோர் ஒரே விமானத்தில் சென்று வாழ்த்தி விட்டு வந்தது சினிமா வட்டாரங்களில் பேசுபொருளானது. அதைவிட முக்கியமான பேசு பொருள், கல்யாணத்துக்கு பிறகு கீர்த்தி சுரேஷ் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகளாக இருக்கட்டும், அவரது பட விழாக்களாக இருக்கட்டும் கல்யாணத்துக்கு முன் அணிந்து சென்ற உடைகளை விட செம கிளாமராக கல்யாணத்துக்கு பிறகு உடையணிந்து செல்கிறார் கீர்த்தி சுரேஷ்.

இதைப் பார்த்த அவரது ரசிகர்களும் சில இயக்குனர்கள் கூட, கீர்த்திக்கு இன்னும் கொஞ்சம் முன்னாடியே கல்யாணம் ஆகி இருந்தா நல்லா இருக்கும் என்று அவரது காதுபட கமண்ட் அடிக்கிறார்களாம்.

## செல்வராகவனின் அடுத்த படம்!

தமிழ் சினிமாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய உணர்ச்சி பூர்வமான திரைக் கதைகளின் இயக்குனர் செல்வராகவன், இடையில் படங்கள் இயக்காமல் நடிப்பு பக்கம் சென்றார். தனுஷின் ஐம்பதாவது படமான ராஜா படத்தில் அவரது நடிப்பு மிகப் பிரமாதமாக பேசப்பட்டது. இந்த நிலையில் ஜூலை இரண்டாம் தேதி புதன்கிழமை தனது அடுத்த படத்திற்கான பூஜையை போட்டு இருக்கிறார் செல்வராகவன்.

## வெற்றிமாறன் படத்தில் ரெண்டு சிம்பு

சில நாட்களுக்கு முன்பு இயக்குனர் வெற்றிமாறன், தனது சொந்த யூடியூப் சேனலுக்கு அளித்த பேட்டியில், "எனது அடுத்த படத்தை கலைப்புலி எஸ் தாணு தயாரிக்க உள்ளார், அதில் சிம்பு கதாநாயகனாக நடிப்பார்" என்று கூறியிருந்தார்.

சிம்பு நடிக்கும் இந்தப் படம் வட சென்னை 2 என்ற ஊகத்தை நிராகரித்த வெற்றி மாறன், "இது வட சென்னை 2 ஆக இருக்குமா என்ற ஊகங்கள் நிறைய உள்ளன. அந்த ஊகத்தையும் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இது வட சென்னை 2 அல்ல. தனுஷ் நடிப்பது வட சென்னை 2. இருப்பினும், இந்தக் கதையும் வட சென்னையில்தான் நடக்கிறது' என்றார்.

இதில் வெற்றிமாறன் சொல்லாத இன்னொரு முக்கிய விஷயம் இந்த படத்தில் சிம்பு இரட்டை வேடங்களில் நடிக்கிறார் என்பதுதான்.

இந்தக் கதையும் இதேபோன்ற காலவரிசையில் இருக்கும்." வயதான சிம்பு, இளமை சிம்பு என இரு சிம்புகளை இதில் வெற்றி மாறன் பாத்திரங்களாக படைத்திருக்கிறார், சிம்பு ரசிகர்களுக்கும் வெற்றி மாறன் ரசிகர்களுக்கும் இரட்டை விருந்துதான்.

## பாலாவின் காந்தி கண்ணாடி

விஜய் டிவியின் நிகழ்ச்சிகளில் எளிய கலைஞராக அறிமுகமாகி, எம்ஜிஆர் ரேஞ்சுக்கு ஏழைகளுக்கு உதவி வரும் ஸ்டாராக இருப்பவர் கலக்கப்போவது யாரு பாலா.

விஜய் டிவியின் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளும் அவர் தமிழ்நாடு முழுவதும் நடக்கும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு தனது திறமையை வெளிப்படுத்தி வருகிறார். அது மட்டுமல்ல தன்னால் முடிந்த அளவு ஏழைகளுக்கு உதவி செய்யும் பழக்கத்தை கடைபிடிக்கும் பாலா இதை ட்ரெண்டிங் ஆகவே ஆக்கி வருகிறார். அவரைப் பார்த்து சினிமா மற்றும் சின்னத்திரை உலகில் பலரும் மற்றவர்களுக்கு உதவி செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள்.

இப்படி சின்னத்திரை மூலமாகவே நல்ல பெயர் எடுத்த பாலா இப்போது, 'காந்தி கண்ணாடி' என்கிற படத்தின் மூலம் சினிமாவுக்கு அறிமுகமாகிறார்.

ஷெரிப் எழுதி இயக்கும் இந்த படத்துக்கு விவேக் மெர்வின் இசையமைக்கிறார். கலக்கப்போவது யாரு பாலா சினிமாவிலும் நிச்சயம் கலக்குவார். நமது வாழ்த்துக்களை தெரிவிப்போம்.

## அன்று ஹீரோ... இன்று டாக்சி டிரைவர்...

உலக அழகி ஐஸ்வர்யா ராய் உள்ளிட்ட பல ஹீரோயின்களுக்கு ஹீரோவாக நடித்து ஒரு காலத்தில் சாக்லேட் பாயாக வலம் வந்த நடிகர் அப்பாஸை நினைவிருக்கிறதா?

'பூவேலி', ஜீன்ஸ்', படையப்பா', 'சுயம்வரம்' மற்றும் 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' போன்ற வெற்றிப் படங்களில் பிரபலமான முகமாக மாறினார். கௌதம் வாசுதேவ் மேனனின் காதல் வெற்றிப் படமான 'மின்னலே படத்தில் சிறிய வேடத்திற்குப் பிறகு, அவர் பெரும்பாலும் துணை வேடங்கள்தான் கிடைத்தன. இறுதியில், அவர் சினிமாவிலிருந்து முற்றிலுமாக விலகினார்.

அப்பாஸ் பின்னர் நியூசிலாந்திற்கு குடிபெயர்ந்து பல்வேறு சிறிய வேலைகளைச் செய்தார். பைக் மெக்கானிக்காக வேலை செய்வதிலிருந்து டாக்சிகள் ஓட்டுவது என நியூசிலாந்திலேயே இருக்கிறார் அப்பாஸ்.

வி.காளமேகம்

# அழிவின் விளிம்பில் தேவாங்குகள்...

# வனத்துறையே அவசர நடவடிக்கை எடு!

**மதுரை மாவட்டம் மேலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கேசம்பட்டி, கம்பூர் உள்ளிட்ட அழகர் மலை அடிவாரத்தில் காணப்படும் தேவாங்குகளைக் காப்பாற்றுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை வைக்கிறார்கள்.**


பல்லுயிர்ச் சூழலுக்கு முக்கிய பங்காற்றும் விலங்குகளில் மிக முதன்மையானது தேவாங்குகள். மிக சாதுவான இந்த விலங்கு காடுகளின் நண்பன் என்றே சொல்லலாம். மதுரை மற்றும் திண்டுக்கல் அழகர் மலை அடிவார கிராமங்களில் தேவாங்குகள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக கேசம்பட்டி, கம்பூர், சேக்கிப்பட்டி ஆகிய கிராமங்களில் அதிகமாக காணப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த சில மாதங்களாக இரவு நேரங்களில் வாகனங்களில் அடிபட்டு தேவாங்குகள் இறக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.


கேசம்பட்டியைச் சேர்ந்த விவசாயி ஜீவா நம்மிடம் கூறுகையில், “கேசம்பட்டி பகுதியில் தேவாங்குகள் அதிக அளவில் வாழ்ந்து வருகின்றன. இப்பகுதியில் தொடர்ச்சியாக வாகனங்களில் அடிபட்டு தேவாங்குகள் இறந்து போவது வேதனையை தருகிறது. கிராம ஊராட்சிகளில் உள்ள பல்லுயிர் மேலாண்மை குழு தலையிட்டு இதுபோன்ற அரிய வகை விலங்கினங்களை பாதுகாப்பதற்கு உரிய முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

ஆனால் அந்தக் குழு தற்போது பெயரளவில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அழகர் மலையின் அடிவாரத்தில் உள்ள காடுகள் சார்ந்த பகுதியில் கேசம்பட்டி உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன.

இங்கு மாமர விவசாயம் தான் நடைபெறுகிறது. அதுமட்டுமன்றி இப்பகுதியில் இரண்டு கோவில் காடுகள் உள்ளன. இவையெல்லாம் தேவாங்குகள் வாழ்வதற்கான ஏதுவான







சூழலை இங்கே உருவாக்கியுள்ளன. குறிப்பாக தேவாங்குகள் வனப்பகுதிகளுக்குள் மட்டுமே இருக்கும். ஆனால் எங்கள் ஊரில் கிராமங்களை ஒட்டிய பகுதியிலேயே அவை வாழ்கின்றன.

இரவு நேரத்தில் தேவாங்குகள் இரைதேடிச் செல்லும்போது, சாலையைக் கடக்க நேரிடுகிறது. அச்சமயம் வாகனங்கள் ஏதும் வந்தால் அவை அடிபட்டு உயிரிழந்து விடுகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தை ஒட்டியுள்ள கடவூர் பகுதியை தேவாங்குகளின் சரணாலயமாக தமிழக அரசு அறிவித்துள்ளது. அங்கு இருப்பதைவிட இங்கு கூடுதல் எண்ணிக்கையில் தேவாங்குகள் உள்ளன. ஆகையால் வனத்துறை இப்பகுதியில் உள்ள தேவாங்குகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்” என்றார் ஜீவா.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் விலங்கியல் பயின்ற தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர் ஜெஸ்வின் ஸ்மைல் கூறுகையில்,

”மேற்கண்ட 3 கிராமங்களிலும் தேவாங்குகள் குறித்த கள ஆய்வினை நான் மேற்கொண்டேன்.

தேவாங்கு (Lorisidae) குடும்பத்தில் சாம்பல் நிற தேவாங்கு (Loris lydekkerianus) மற்றும் வங்காள தேவாங்கு (Nycticebus bengalensis) என இரு சிற்றினங்கள் இந்தியாவில் காணப்படுகிறது.

அதில் சாம்பல் நிற தேவாங்கு உலகில் இலங்கை மற்றும் தென்னிந்திய பகுதியில் மட்டுமே காணப்படுகிற அரிய உயிரினமாகும். பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் (மிஹிசிழி) சாம்பல் நிற தேவாங்கை அச்சுறுத்தலை (ழிஜி) சந்திக்கும் விலங்கென ஆய்வறிந்து சிவப்பு பட்டியலில் இணைத்துள்ளது.

ஆகையால் இவற்றை பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை. பூச்சிகள் எறும்புகள் உள்ளிட்டவையே இவற்றின் உணவாகும். அவ்வப்போது பழங்களும் உண்ணும். கேசம்பட்டி பகுதிகளிலேயே தேவாங்குகளின் எண்ணிக்கை பெருமளவில் சரியத் தொடங்கியுள்ளது.

இது ஒரு இரவாடி விலங்கு என்பதால், சாலைகளில் அடிபட்டுச் சாவது அதிகமாக உள்ளது.

இப்பகுதிகளில் காணப்படும் கோயில்காடுகள், நீர்நிலை கரையோர காடுகள், மலைக்குன்றுகள், வேளாண் பகுதிகள் என பல பகுதியில் ஆய்வை மேற்கொண்டேன். இந்த ஆய்வு கடந்த டிசம்பர் 2024 முதல் மார்ச் 2025 வரை என மொத்தம் நான்கு மாதங்கள் நடைபெற்றது. ஆய்வின் போது எண்ணிக்கையின் அடிப்படையில் மொத்தமாக 194 சாம்பல் நிற தேவாங்குகளை பதிவு செய்தேன்.

கேசம்பட்டி கிராமத்தில் அதிகபட்சமாக 111 தேவாங்குகள் காணப்பட்டன. மற்ற இரு ஊராட்சிகளான கம்பூர் மற்றும்

சேக்கிபட்டியில் முறையே 55 மற்றும் 28 தேவாங்குகளை கண்டேன். ஆய்வு மேற்கொண்ட காலத்தில் அதிக எண்ணிக்கையிலான தேவாங்குகள் (91) டிசம்பர் மாதத்திலும், குறைந்த எண்ணிக்கையிலான தேவாங்குகள் (17) மார்ச் மாதத்திலும் பதிவானது.

மார்ச் மாதத்தில் தேவாங்குகள் குறைவாகக் காணப்படுவதற்கான ஒரு காரணமாக, மாம்பழ தோட்டங்களில் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லி மருந்துகள் இருக்கக்கூடும். இது அவற்றின் இயல்பான நடத்தை மற்றும் வாழிடப் பயன்பாட்டை பாதிக்கக்கூடியதாக இருக்கலாம்.

நாங்கள் ஆய்வு மேற்கொண்ட நான்கு மாதத்திலேயே சாலையில்


பொன்னழகு


ஜீவா


ஜஸ்வின் ஸ்மைல்

அடிபட்டு கிடந்த தேவாங்குகளை பார்க்க முடிந்தது. மார்ச் மாதங்களில் இப்பகுதியில் மாம்பழ விளைச்சல் அதிகமாக இருக்கும். அப்போது மரங்களில் பூச்சிகளின் நடமாட்டமும் இருக்கும். அவை தேவாங்குகளின் உணவுக்கு ஏற்ற சூழல். ஆனால் மாம்பழங்களை பாதுகாப்பதற்காக தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லிகளால் எறும்பு, கரையான், பூச்சிகள் செத்து விடுகின்றன. இதனால் தேவாங்குகளுக்கு உணவு கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

இதனால் சாலையை கடந்து செல்ல நேரிடுகிறது. இதன் காரணமாக அவை ஆபத்தை எதிர்கொள்கின்றன. ஆகையால் இந்த விபத்துகளை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை வனத்துறை அவசரமாக மேற்கொள்ள வேண்டும். தேவாங்குகளின் சரணாலயமாக இப்பகுதியை அறிவிக்க வேண்டும்" என்கிறார்.

விளைநிலங்களை பாதுகாப்பதில் தேவாங்குகளின் பங்கு அளப்பரியது. விளை பயிர்களைத் தாக்கும் பூச்சி புழுக்களையும் தவளைகளையும் தேவாங்குகள் உணவாக உட்கொள்கின்றன. மேலும் வெட்டுக்கிளி தட்டான் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் ஆற்றலும் தேவாங்குகளுக்கே உண்டு.

கேசம்பட்டியை சேர்ந்த வெண்ணிலா, பொன்னழகு ஆகியோர் நம்மிடம்,, "அண்மை காலங்களாக தேவாங்குகளின் எண்ணிக்கை குறைந்து அருகி வருகிறது. ஊருக்குள் இருக்கின்ற மரங்களிலேயே தேவாங்குகளை பார்க்க முடியும். தேவாங்குகளை பாதுகாப்பதற்கான உரிய ஏற்பாடுகள் இங்கு இல்லை. ஆகையால் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு தேவாங்குகளை பாதுகாக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்." என்றனர்..

இதுகுறித்து மதுரை மாவட்ட வனத்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது, "இப்பகுதியில் தேவாங்கு சரணாலயம் அமைக்கும் அளவிற்கு அவற்றின் எண்ணிக்கை உள்ளதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மேலும் மதுரை திண்டுக்கல் மாவட்ட வனப்பகுதி என்பதால், உரிய அதிகாரிகளோடு கலந்து பேசி தான் இதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள முடியும். ஊர் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க வனத்துறை இப்பகுதியில் ஆய்வு மேற்கொண்டது.

பிறகு தேவாங்குகளை பாதுகாப்பதற்கு உரிய செயல் திட்டத்தை வகுத்து அரசுக்கு அனுப்பி வைப்போம்" என்றனர்,.

சீக்கிரம் செய்ங்கப்பா... பாவம் அந்த தேவாங்குகள்! மக்களும் தேவாங்குகளை கொல்லாமல் வாகனங்களை ஒட்ட வேண்டும்!

# அஜித்குமார் கொலை...

## அமித்ஷா கேட்ட ரிப்போர்ட்... ஓரணியில் எதிர்க்கட்சிகள்! அப்செட் ஸ்டாலின்



**வாக்கிங் டாக்கிங்**



வாக்கிங் தொடங்குவதற்கு முன்பாக சண்முகமும் பாண்டியனும் இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

சிவகங்கை மாவட்டம் திருபுவனத்தில் போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்ட ஏழை குடும்பத்தில் பிறந்த செக்யூரிட்டி அஜித்குமாருக்காக, தான் சண்முகமும் பாண்டியனும் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

இரண்டு நிமிடங்கள் முடிந்த பிறகு மௌனத்தை உடைத்து பாண்டியன் பேச தொடங்கினார்.

“நிகிதா என்ற கல்லூரி பேராசிரியர் தனது நகை காணாமல் போய்விட்டது என்று வாய் மொழியாக சொன்ன தகவலை கேட்டு, திருபுவனம் மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவில் செக்யூரிட்டியாக வேலை பார்க்கும் அஜித்குமார்தான் அதை எடுத்திருப்பார் என யூகித்து எவ்விதமான சட்டபூர்வ நடைமுறைகளையும் பின்பற்றாமல் அஜித்குமாரை அடித்துக் கொன்று விட்டனர் போலீசார்.

மதுரை உயர்நீதிமன்றம், ‘மாநிலமே தனது குடிமகனை கொன்று விட்டது என்று கண்டிப்போடும் வேதனையோடும்’ பதிவு செய்திருக்கிறது. அதாவது அரசு பயங்கரவாதம் என்பதைத்தான் மதுரை



உயர்நீதிமன்றம் வேறு வார்த்தைகளில் கூறியிருக்கிறது.

ஜூன் 27ஆம் தேதி சட்டவிரோத போலீஸ் கஸ்டடியில் எடுக்கப்பட்ட அஜித்குமார் அதன் பிறகு இரண்டு நாட்கள் அங்கேயும் இங்கேயும் வைத்து அடித்து அதன்பின் கொல்லப்பட்டிருக்கிறார்.

ஜூலை 1ஆம் தேதி முதலமைச்சர் ஸ்டாலின் ஏற்கனவே திட்டமிட்டபடி ஓரணியில் தமிழ்நாடு என்ற தேர்தல் பிரச்சாரத்தையும் ஒவ்வொரு பூத்திலும் 30 சதவீதத்தினர் திமுகவில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் உறுப்பினர் சேர்க்கையையும் பிரம்மாண்டமாக தொடங்க திட்டமிட்டு இருந்தார்.

ஆனால் ஜூலை 1ஆம் தேதி அஜித்குமார் லாக்கப் மர்டர் விவகாரம் ஊடகங்கள், சமூக ஊடகங்கள் அனைத்திலும் பற்றி எரிந்தது. இதனால் சென்னையில் ஸ்டாலின், அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து அமைச்சர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்ற பிரச்சார இயக்கத்தினை தொடங்கி வைக்கும் அந்த நிகழ்வு செய்திகளில் முன்னுக்கு வராமல் போய்விட்டது.

அந்த நிகழ்விலேயே செய்தியாளர்கள் அஜித்குமார் லாக்கப் மர்டர் பற்றி கேட்க அதற்கு ஸ்டாலின் உரிய நடவடிக்கை எடுத்து விட்டோம் என்று பதில் கூறினார்.

ஆனால் அதே நாள் மதுரை உயர்நீதிமன்றம் இந்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசை கேள்வி மேல் கேள்வி கேட்டு சரமாரியாக கண்டித்தது. சாட்சிகளை போலீசாரே அழிக்க முயற்சி செய்திருக்கிறார்கள், இந்த விவகாரத்தில் உயரதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை என்றெல்லாம் கோபமாக கேள்விகள் கேட்டார்கள் நீதிபதிகள்.

இதுவரை பெரும்பாலான வழக்குகளில் இல்லாத வகையில் இந்த வழக்கு விசாரணையின் வீடியோவும் வைரலானது. எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியும் இந்த விவகாரத்தை தீவிரமாக கையில் எடுத்து அனைத்து மாவட்டங்களிலும் அஜித்குமாருக்கு நீதி வேண்டும் என அதிமுக மாவட்ட செயலாளர்களை போராட்டத்தில் இறக்கி விட்டார். சிபிஐ விசாரணை வேண்டும் என எடப்பாடி கோரிக்கை வைத்தார்.

இன்னொரு பக்கம் தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்தார்.

மதுரை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் கோபத்தை வீடியோவிலேயே பார்த்து அதிர்ந்த முதலமைச்சர் ஸ்டாலின் உடனடியாக இந்த வழக்கை சிபிஐக்கு மாற்றி அன்று மாலை உத்தரவிட்டார்.

## தாக்கப்பட்ட நிருபர்கள்... இந்தியன் ஜர்னலிஸ்ட் யூனியன் கண்டனம்!

சேலம் வில்லியம்பட்டி பகுதியில் கடந்த ஜூலை 2 ஆம் தேதி செய்தி சேகரிக்கச் சென்ற நியூஸ் தமிழ் தொலைக்காட்சி நிருபர் சிலம்பரசன், அவரது குழுவினர் மண் கடத்தல் கும்பலால் கண்மூடித் தனமாக தாக்கப்பட்டுள்ளனர்.



இந்த சம்பவம் குறித்து கண்டனம் தெரிவித்துள்ள இந்தியன் ஜர்னலிஸ்ட் யூனியன் தேசிய செயலாளரான பா. சிவகுமார், "பத்திரிகையாளர்களை மண் கடத்தல் கும்பல் கண்மூடித் தனமாக தாக்கிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பத்திரிகை சுதந்திரத்தையே கேள்விக்குறியாக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய வன்மங்களுக்கு நீதித்துறை கடுமையான தண்டனை வழங்கிட வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார்.

திமுக கூட்டணி கட்சி தலைவர்களான திருமாவளவன், வேல் முருகன் ஆகியோர் நேரடியாக திருபுவனத்திற்கு சென்று கொல்லப்பட்ட அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

முதலமைச்சர் ஸ்டாலின் சிவகங்கை மாவட்ட அமைச்சர் பெரிய கருப்பனை அஜித்குமாரின் வீட்டுக்கு அனுப்பி அவரது சகோதரர், தாயாரோடு போனில் பேசினார். அப்போது சாரிம்மா சாரிம்மா என முதலமைச்சர் அஜித்குமாரின் அம்மாவிடம் வருத்தம் கலந்த மன்னிப்பு கேட்டார். உடனடியாக அஜித்குமாரின் சகோதரருக்கு ஆவினில் அரசு வேலையும் வழங்கப்பட்டது.

இதையெல்லாம் தாண்டி தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் திடீரென புறப்பட்டு திருபுவனம் சென்று அஜித்குமாரின் தாயாரை சந்தித்தார். விஜயின் இந்த நகர்வு ஆளுங்கட்சியை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

பிரதான எதிர்க்கட்சித் தலைவரான எடப்பாடி பழனிசாமி செல்போன் மூலம் அஜித் குமாரின் தாயாரோடு உரையாடினார். ஆனால் விஜய் அப்படி இல்லாமல் நேரடியாக களத்தில் இறங்கி அஜித் குமாரின் வீட்டுக்கே சென்று ஆறுதல் தெரிவித்தார்.

இந்நிலையில் டிஜிபி சங்கர் ஜீவாவின் அறிவிப்பு மேலும் ஒரு சர்ச்சையை கிளப்பியது. அதிகாரிகளின் கீழ் தேவையில்லாமல் செயல்படும் தனிப்படைகளை கலைத்து டிஜிபி உத்தரவிட்டார். அப்படி என்றால் அஜித்குமாரை கொலை செய்த தனிப்படை போல சிறப்பு அதிகாரம் பெற்ற, ஆனால் அங்கீகாரமற்ற பல்வேறு தனிப்படைகள் அதிகாரபூர்வமில்லாமல் மாநிலம் முழுவதும் இயங்கி வந்திருக்கின்றன என்பதை டிஜிபியே உறுதிப்படுத்துகிறாரா என்ற கேள்வியும் அரசியல் வட்டாரங்களில் எழுந்தது.

இதற்கிடையில் இந்த விவகாரம் பற்றி தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு ஒரு ரிப்போர்ட் அனுப்பி உள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியில் சாத்தான்குளத்தில் ஜெயராஜ் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர் காவல் நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்ட விவகாரம் பெரிய சர்ச்சையானது. விவகாரத்தை நாடார் சங்கங்கள் கையில் எடுத்து மிகப்பெரிய அளவில் போராடினர். இது 2021 சட்டமன்றத் தேர்தலிலும் திமுகவுக்கு சாதகத்தை ஏற்படுத்தியது. அப்போது கொல்லப்பட்டவர்கள் கிறிஸ்தவ நாடார் சமுதாயத்தை சேர்ந்தவர்கள். மேலும் அந்த சம்பவம் நடந்த சாத்தான்குளம் நாடார்கள் அடர்த்தியான மாவட்டமான தூத்துக்குடியில் நடைபெற்றது.

இப்போது போலீசாரால் அடித்து கொல்லப்பட்ட அஜித்குமாரும் நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர் தான். ஆனால் அவர் இந்து நாடார் சமுதாயம்.

சிவகங்கையில் நாடார் சமுதாயத்தினர் மிக சொற்பமான அளவில் தான் உள்ளனர். மேலும் இந்த விவகாரத்தில் அரசுக்கு எதிராக நாடார் சங்கங்கள் போராட்டம் நடத்துவதை திமுக அரசு தடுத்துவிட்டது.

எனவே எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தபோது சாத்தான்குளம் லாக்கப் கொலைக்கு எதிராக எவ்வாறு போராட்டங்கள் கட்டமைக்கப்பட்டதோ அதேபோல இப்போதும்






# NDAவில் வைகோ...
# தி.மு.க.வில் மல்லை சத்யா

போராட்டங்கள் கட்டமைக்கப்பட வேண்டும். அதற்கு மத்திய அரசின் உதவி வேண்டும் என்று தமிழ்நாடு பாஜகவின் சார்பில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு ரிப்போர்ட் அனுப்பப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல அஜித்குமார் கொலைக்கு அடிப்படை காரணமாக அமைந்த பேராசிரியர் நிகிதா பல மோசடி குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர். அவருக்கும் திமுக பெரும்புள்ளிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்த வகையிலும் சிபிஐ விசாரணையில் திமுகவை அரசியல் ரீதியாக டேமேஜ் செய்ய முடியும் என்று அமித் ஷாவுக்கு ரிப்போர்ட் சென்று இருக்கிறது.

ஓரணியில் தமிழ்நாடு என்ற பெயரில் திமுக தேர்தல் பிரச்சாரம் மற்றும் உறுப்பினர் சேர்க்கையை முறைப்படி தொடங்கிய நிலையில்... அஜித் குமார் லாக்கப் மர்டர் விவகாரம் விஸ்வரூபம் எடுத்து விட்டதால் திமுக அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரளும் அரசியல் சூழ்நிலை உருவாகிவிட்டது. இது முதலமைச்சர் ஸ்டாலினை அப்செட் ஆக்கியிருக்கிறது என்கிறார்கள்" என்று மூச்சு விடாமல் சொல்லி முடித்தார் பாண்டியன்.

அடுத்ததாக சண்முகம் தன் பங்குக்கு ஒரு செய்தியை சொன்னார்.

"ஜூலை 2 ஆம் தேதி மதிமுக பொதுச் செயலாளர் வைகோ திமுக தலைமை அலுவலகமான அறிவாலயம் சென்று முதலமைச்சர் ஸ்டாலினை சந்தித்தார். அதன் பின் செய்தியாளர்களிடம் திமுகவை போற்றிப் புகழ்ந்தார்.

ஆனால் 2 நாட்களுக்கு முன் ஜூன் 29ஆம் தேதி நடந்த மதிமுக நிர்வாக குழு கூட்டத்தில் திமுக மீது கடுமையான அட்டாக் வைக்கப்பட்டிருக்கிறது. அவைத் தலைவர் ஆடிட்டர் அர்ஜுன் ராஜ் திமுக மல்லை சத்யா உள்ளிட்ட சிலரை தூண்டிவிட்டு மதிமுகவுக்கு எதிராக வேவு பார்க்கிறது என குற்றம் சாட்டினார். இதே குற்றச்சாட்டை வைகோவும் மல்லை சத்யா மீது அந்த நிர்வாக குழு கூட்டத்தில் பகிரங்கமாக வைத்தார்.

ஆனால் அடுத்த இரண்டு நாட்களில் அறிவாலயம் சென்று ஸ்டாலினை சந்தித்து திமுகவுடன் தான் கூட்டணி என்று செய்தியாளரிடம் கூறுகிறார் வைகோ.

இது பற்றி மதிமுக வட்டாரத்தில் விசாரித்த போது அதிமுகவின் முதன்மை செயலாளர் துரை வைகோ தேசிய ஜனநாயக கூட்டணியில் மதிமுக சேர்வதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறார். தேசிய ஜனநாயக கூட்டணியில் மதிமுகவுக்கு அதிக இடங்கள் வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்டாலினை சந்தித்து திமுக கூட்டணியில் உறுதியாக தொடர்வோம் என வைகோ அறிவித்திருப்பதாக முக்கிய நிர்வாகிகளை கூறுகிறார்கள். இது ஸ்டாலினுக்கு தெரியாமல் இருக்குமா என்ன?" இன்றைக்கு கேள்வி கேட்டபடியே வாக்கிங்கை முடித்தார் சண்முகம்.



Published & Printed by Mr. T. BACKIARAJ Chairman of Thazhai News & media and Publisher, On behalf of Published Namadhu Arasiyal Today and Printed at 27/65, Devaraj Street, Triplicane, Chennai - 600 005 Editor T. Backiaraj all cases related to Namadhu Arasiyal Today are subject to jurisdiction of chennai courts only.